விலை: 60.00
பக்கங்கள் : 20

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 061 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 06 ஞாயிற்றுக்கிழமை (18.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


# தமிழ்க் கட்சிகளின் பிளவு ஆபத்தானது

## யாழில் இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜா



(யாழ்ப்பாணம்)

தமிழ்க் கட்சிகளின் பிளவு ஆபத்தானது. அவர்களின் பிரிவு வருத்தமளிக்கிறது. தமிழ்க் கட்சிகள் மேலும் பிளவடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஸ் ஜா வலியுறுத்தியுள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## வீதி விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆனைப்பந்திச் சந்தியில் அம்புலன்ஸ் - மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். 20

## போதையை கட்டுப்படுத்துக

### யாழ்.பொலிஸாருக்கு சிறப்புக் கட்டளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பொலிஸாருக்கு சிறப்பு கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன.

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் போதைப் பொருள் விற்பனையைத் தடுத்தல் 02

மன்னாரில் 10 வயது சிறுமி

## வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கழுத்து நெரித்து படுகொலை

### பிரேத பரிசோதனையில் அறிக்கை

(மன்னார்)

மன்னாரில் 10 வயது சிறுமி ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பிரேத பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

தலைமன்னார் ஊர்மனை கிராமத் 19



## தமிழரசுக் கட்சி யாப்பின்படி செயற்படுவதே சரியான முறை

### நீதிமன்ற வழக்குத் தொடர்பில் சுமந்திரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்பில் இருக்கின்ற விடயங்கள் சரியாகப் பின்பற்றப்படவில்லை என நீதிமன்றில் சுட்டிக்காட்டப்படுமாக இருந்தால் பொறுப்பான அரசியல் கட்சியாக அதனைத் திருத்தி யாப்பின்படி செயற்படுவதுதான் சரியான முறை என்று நான் கருதுகின்றேன் என தமிழரசுக் கட்சியின் யாழ் 19

## இலங்கைக்கு சீனா அழுத்தம் கொடுக்கின்றது

### மைத்திரி குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கைக்கு சீனா அழுத்தங்களை கொடுப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக் காட்டியுள்ளார். 19

## தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு தயாராகும் ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுகாணத் தவறினால் எதிர்வரும் 20ஆம் திகதி மத்திய மாகாணத்தை மையமாகக்கொண்டு 02

## முல்லையில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தேவிபுரம் பகுதியில் நேற்றிரவு இடம் பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தேவிபுரம் அ பகுதியை நோக்கி உந்துருளியில் பயணித்துக் கொண்டு இருந்த போது வீதிக்கு அருகில் தொங்கிக் கொண்டு இருந்த பெரு மரக்கிளை ஒன்றில் மோதி இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

தேவிபுரம் ஆ பகுதியைச் சேர்ந்த தொழிலாளி ஆன 52 வயதை உடைய கிட்டிணன் சிவபாஸ் 19

## விமான நிலைய விஸ்தரிப்புக்கு மக்கள் காணி அபகரிக்கப்படாது

### இந்தியா வாக்குறுதி தந்துள்ளதாக விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விரிவுபடுத்தலுக்காக மக்களின் 500 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்படவுள்ளதாக வெளியான செய்திகள் பொய்யானவை எனவும், அப்படி எந்தவித மான எண்ணமும் இந்தியாவிற்கு இல்லை எனவும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தம்மிடம் தெரிவித்தார் என பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். 19

நிறைவேற்று அதிகார முறை நீக்கல்

## பின்னணியில் சந்திரிகா

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவது தொடர்பில் பரவலாக பேசப்பட்டு வரும் நிலையில், குறித்த நடவடிக்கையின் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எனினும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கும் நடவடிக்கைக்கு தற்போது பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்க் கட்சி...

இலங்கைக்கான இந்தியத் தூதுவர், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகள் உள்ளிட்ட சிலரை நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போதே தமிழ்க் கட்சிகளின் பிளவு ஆபத்தானது என்றும் பிளவுகளை சரி செய்யப்பட்டு அரசியல் பயணங்கள் தொடரவேண்டும் என்றும் சந்தோஷ் ஜா சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ் அரசியல்வாதிகள் ஒவ்வொருவருடனும் தனித்தனியே இந்தியத் தூதுவர் கலந்துரையாடியுள்ளார்.

இருக்கின்ற தமிழ்க் கட்சிகள் மேலும் பிளவடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் சந்தோஷ் ஜா ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இந்தியத் தூதுவர், வடக்கில் தமிழ் கட்சிகளை சந்தித்துள்ளமையின் ஊடாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் இந்தியா அக்கறை கொண்டுள்ளதை வெளிப்படுத்துவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (ம-7)

## தொழிற்சங்க...

பாரிய தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

கல்வித்துறையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் பொறுப்பான அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, மாகாண ஆளுநர்கள் மற்றும் கல்வி தொழிற்சங்கங்களுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் அவர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

இச்சந்திப்பில் மாகாண கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன், ஆசிரியர் சம்பள முரண்பாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## போதையை...

தொடர்பில் விரைந்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இந்த சிறப்பு கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் கட்டளைகளை நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்த யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க வழங்கினார்.

அத்தோடு, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ்மொழி தெரிந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திய அவர், பொதுமக்களின் அன்றாட வாழ்வுக்கு இடையூறாக உள்ள குற்றச் செயல்களை விரைந்து தடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

போதைப்பொருள் விற்பனையை தடுத்தல், அதன் பாவனையை முற்றாக ஒழித்தல் போன்ற நடவடிக்கைகளை பொலிஸார் எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்ற ஆலோசனைகளையும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வழங்கினார். (ம-7)

அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்
ACADEMIC YEAR
2024
தமிழ் மொழி மூலம்; English Medium
Class Started on
19.02.2024
Monday @ 03.20 pm
(19161)
"Aharam, The prosperous future of our nation's children".

அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்
புதிய கல்வி ஆண்டு
2024
தமிழ் மொழி மூலம்; English Medium
ஆரம்பம் :
19.02.2024
மாலை-3.00 மணி
(19161)
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்".

இணுவில் கந்தசாமி கோவில் சூழலில் காணி/ வீடு தேவை
இறைபதம் அடைந்த சிவஸ்ரீ இராமையர் - நாகரட்ணம் ஐயர் குடும்பத்தினர் ஊரில் வசிப்பதற்கு வீடு/ காணி 1 பரப்பு அவசியமாக தேவைப்படுகிறது.
சிவஸ்ரீ நாகரத்தின ஐயா
கலாதரக்குருக்கள்
077 969 0990
(C-8377)

மலிவு விற்பனை
கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-8374)
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

பணியாளர் தேவை
Computer மூலம் Email, பிறிண்டிங், ரைப்பிங், போட்டோசொப், ஸ்கானிங் ஆகியவற்றில் அனுபவமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
076 315 6470
(C-8373)

வேலையாள் தேவை
- கணக்காளர் (பகுதி நேரம்)
- வாகனச் சாரதி (AD கன்ரர் )
- தளபாடங்களுக்கு வானிஸ் பூசுதல்
"நிரந்தர வேலைவாய்ப்பு"
யாழ்ப்பாணம்
076 821 9414
(19162)

## மரண அறிவித்தல்

தோற்றம்
05 - 12 - 1992



மறைவு
14 - 02 - 2024

### ஆனந்தராசா சயந்தன்
### (தொழிலதிபர்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தராசா சயந்தன்(தொழிலதிபர்) அவர்கள் கடந்த 14.02.2024 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஆனந்தராசா - சுகிர்தா தம்பதியரின் அன்பு மகனும் சுதாகரன் - பார்க்கவி தம்பதியரின் அன்பு மருமகனும் அமரர் காத்திகேசு மற்றும் செல்வமலர், அமரர் நடராசா மற்றும் யோகம்மா ஆகியோரின் அன்பு பேரனும் பிரியங்கா அவர்களின் பாசமிகு கணவரும் அப்ஷராவின் பாசமிகு தந்தையும் பிரசாந்தியின் அன்பு சகோதரனும் சிந்துராஜ் அவர்களின் அன்பு மைத்துனரும் ஜெயிலன், ஹைசன், அக்ஷறா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மதுரங்கா, சாரங்கா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.02.2024 இன்று ஞாயிற்றுக் கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 19.01.2024 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் செல்வராசா சிந்துஜன் (சிந்து)

வாழும் வயது; வளர வேண்டிய ஆற்றல்;
தன் குடும்பம், பெற்றோர்
சமூகத்திற்குதவு நேரம்;
ஆசை மனைவி அரும்புதல்வி அன்பினிலே
வாழ்வைச் சுவைக்கின்ற காலம்;
யாவருக்கும் பேரிடியாய் வீழ்ந்தது
உன் பிரிவுச் செய்தி!
ஆறா இரணமாச்சு எமது இதயங்கள்!
ஈடுசெய்ய முடியாது உன் இழப்பு
உன் ஆன்ம
சாந்திக்காய் நேர்கிறது
சமாதானப் படாத மனம்!

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (18.02.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] A.V. றோட்,
[illegible]த்துறை, யாழ்ப்பாணம். (19111)

தகவல்:- குடும்பத்தினர்
077 132 3933, 077 295 0320

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட வைத்தியர்களின் பற்றாக்குறையால் தாமதமாகும் சத்திர சிகிச்சைகள்

**(கொழும்பு)**


**விசேட வைத்தியர்களின் பற்றாக்குறை காரணமாக அரச மருத்துவமனைகளில் சத்திர சிகிச்சைகள் தாமதமடைவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

மூன்று விசேட வைத்தியர்கள் இருக்க வேண்டிய நிலையில், சில அரச மருத்துவமனைகளில் ஒருவர் மாத்திரமே உள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக மருத்துவமனைகளில் சத்திர சிகிச்சைகள் தாமதமடைவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் 340 விசேட மருத்துவர்களுக்கான பற்றாக்குறை காணப்பட்டதாகவும் தற்போது சுமார் 400 விசேட மருத்துவர்கள் வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்காக நாட்டை விட்டுச்சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

## முன்னாள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம காலமானார்



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா உயிரிழந்தார்.

தனது 83 ஆம்வயதில் உயிரிழந்துள்ளதாக குடும்ப தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# ரிச்சர்ட் வர்மா இலங்கை விஜயம்

(கொழும்பு)

அமெரிக்க துணை வெளியுறவு செயலாளர் ரிச்சர்ட் வர்மா இலங்கை, இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு 6 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இன்று முதல் எதிர்வரும் 23ஆம் திகதி வரை அவர் குறித்த நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த இராஜதந்திர விஜயத்தின் போது இலங்கை உள்ளிட்ட நாடுகளுடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் அவர் கலந்துரையாடல்களை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவரது இலங்கை விஜயத்தின் போது அமெரிக்க - இலங்கை பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து கவனம்



செலுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (நி)

# ஆசிய மற்றும் பசுபிக் வலய மாநாடு இன்று

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் 37ஆவது ஆசிய மற்றும் பசுபிக் வலய மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

குறித்த மாநாடு எதிர்வரும் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட விவசாய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மாநாட்டில் சீனா, மலேசியா, ஜப்பான், பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட 35 நாடுகளைச் சேர்ந்த விவசாய அமைச்சர்கள் கலந்து கொள்கின்றனர். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## கறுப்புப் பட்டி அணிந்து விளையாடிய இந்திய வீரர்கள்



இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பித்து நடைபெற்று வருகிறது.

நேற்றைய ஆட்டத்தின்போது இந்திய வீரர்கள் கையில் கறுப்புப் பட்டை அணிந்து விளையாடினர். கடந்த 13 ஆம் திகதி இந்திய அணியின் முன்னாள் கப்டனும் மிகவும் வயதான டெஸ்ட் கிரிக்கெட் வீரராக வாழ்ந்தவருமான தத்தாஜிராவ் கெய்க்வாட் தனது 95 வயதில் காலமானார்.

அதன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் கறுப்புப் பட்டை அணிந்து விளையாடுவதாக பி.சி.சி.ஐ தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது. (நி)

## டெஸ்ட் போட்டியிலிருந்து அஸ்வின் திடீர் விலகல்

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் இடையேயான மூன்றாவது டெஸ்ட் போட்டி நடைபெற்று வரும் நிலையில், இந்திய அணியில் இருந்து விலகுவதாக ரவிசந்திரன் அஸ்வின் அறிவித்துள்ளார். இது தொடர்பான தகவலை பி.சி.சி.ஐ நேற்று முன்தினம் இரவு அறிவித்தது. குடும்பத்தில் மருத்துவ அவசரம் காரணமாக அவர் அணியில் இருந்து விலகியுள்ளார்.

திடீரென அணியில் இருந்து விலகியுள்ள அஸ்வினுக்கு தேவையான உதவிகளை செய்ய கிரிக்கெட் வாரியம் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளது. ராஜ்கோட்டில் நடைபெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அஸ்வின் தனது 500ஆவது விக்கெட்டை கைப்பற்றிய நிலையில், அவர் அணியில் இருந்து விலகியுள்ளார்.

இது தொடர்பாக பி.சி.சி.ஐ வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "குடும்பத்தில் மருத்துவ அவசரம் காரணமாக ரவிசந்திரன் அஸ்வின் டெஸ்ட் அணியில் இருந்து விலகியுள்ளார். இந்த சவாலான நேரத்தில், பி.சி.சி.ஐ மற்றும் அணியின் முழு ஒத்துழைப்பு அஸ்வினுக்கு உள்ளது" என குறிப்பிட்டுள்ளது.

"ரவிசந்திரன் அஸ்வினின் தாயார் விரைந்து குணமடைய வேண்டுகிறேன். தனது தாயாருடன் இருப்பதற்காக அவர் ராஸ்கோட் டெஸ்ட்இல் இருந்து விலகி அவசர அவசரமாக சென்னை விரைந்து ள்ளார்" என்று ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார். (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3043

### ராகவி




### சுபாசினி




### சதீஸ்




### தமிழ்

எல்லாரிடமும் உங்கள்
சோகக் கதைகளை சொல்லிக்
கொண்டிருக்காதீர்கள்...
உங்களுக்குத்தான்
அது வாழ்க்கை.
பிறருக்கு அது மற்றுமொரு
டிவி சீரியலே...!!!!

### ஜெயராஜ்




### டேனுஜா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் மின் உற்பத்தியை மட்டுப்படுத்த தீர்மானம்

## மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு கோரிக்கை



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியான கால நிலையை தொடர்ந்து நீர் மின் உற்பத்தியை மட்டுப் படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது.இந்த செயற்பாட்டினால் அனல் மின் உற்பத்தியை 63% ஆக அதிகரிக்க முடியும் என இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் நோயல் பிரியந்த தெரிவித்துள்ளார்.

மின் தேவை அதிகரித்து வருவதால் நீர்த்தேக்கங்களில் நீர் நிலைகளை நிர்வகிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தநிலையில், மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ந)

# கடலில் மூழ்கி மாணவர்கள் பலி

## அம்பாறையில் சோகம்

(அம்பாறை)

அம்பாறையில் நேற்று முன்தினம் கடலில் மூழ்கி மாயமான பாடசாலை மாணவர்கள் இருவரும் நேற்று முற்பகல் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மாளிகைக்காடு - சாய்ந்தமருதைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 8 பேர் நிந்தவூர் பிரதேச கடலில் நேற்று முன்தினம் பிற்பகல் படம் எடுத்து விளையாடிக் கொண்டிருந்தபோது அதில் இருவர் கடலில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போயிருந்தனர். அவர்களின் சடலங்களே மீட்கப்பட்டுள்ளன.

மாளிகைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த சூர்தீன் முஹம்மட் முன்சிப் (வயது 15), சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்த முஹம்மட் இல்ஹம் (வயது 15) ஆகிய மாணவர்களே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.(ந)

# மியன்மாரில் கைது செய்யப்பட்ட 15 இலங்கை மீனவர்களுக்கு சிறை

(மியன்மார்)

மியன்மாரில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் இருவருக்கு மியன்மார் நீதிமன்றம் 5 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

மீன்பிடி படகுகளை செலுத்தியவர்களுக்கே 5 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன். மேலும் 13 இலங்கை மீனவர்களுக்கு 3 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக மியன்மாருக்கான இலங்கை தூதுவர் ஜனக பண்டார தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பொது மன்னிப்பின் கீழ் மீனவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக தூதுவர் தெரிவித்தார். மியன்மார் கடல் எல்லையை மீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றசாட்டில் 2 மீன்பிடி படகுகளுடன் 15 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந)




# இராசிபலன்

18.02.2024
மாசி 06, ஞாயிற்றுக்கிழமை
நவமி பிற்பகல் 1.11 மணிவரை
ரோகினி பிற்பகல் 1.57 மணிவரை

சுபநேரம் -9.32-11.02 மணிவரை
இராகுகாலம்-5.02-6.32மணிவரை

சந்திராஷ்டமம்
சித்திரை,சுவாதி.

வளவன்

**மேஷம்** – எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், குடும்பத்தேவைகள் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** – பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உடல் நலன் சீராகும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.

**மிதுனம்** – விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் நடந்து கொள்வது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், யாராவது உதவிகள் கேட்டு வரலாம்.

**கடகம்** – ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் பெருகி வளம் காணும் நாள்.

**சிம்மம்** – தொட்ட காரியம் துளிர்விடும் நாள், எடுத்த காரியங்களில் உற்சாகம் காட்டுவீர்கள்,போசன சுகமுண்டு, பிறர் உதவியுண்டு, கௌரவமான நாள்.

**கன்னி** – பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** – பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், வரவும் செலவும் சமமாகும் நாள்.

**விருச்சிகம்** – உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**தனுசு** – அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**மகரம்** – வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்,மறைமுக போட்டிகள் மாறும், புண்ணிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்** – உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்கள் செல்லும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**மீனம்** – உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தினர் குணமறிந்து நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

சமூகத்தைப்பற்றி கவலைப்படாதவன் ஒழுக்கக்கேட்டில் உழன்று திரிவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் நாவலர் விழாவும் பாலர் பாடசாலை மாணவர்களின் பரிசளிப்பு விழா நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலி காமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் கணேசரத்தினம் ஆதித்தன், சிறப்புவிருந்தினராக அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் பண்டிதர். சைவப்புலவர் செ.த.குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி)

## இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினைக்கு விரைவில் நிலையான தீர்வு -யாழில் ஜீவன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு விரைவில் நிலையானதொரு தீர்வை காணுமாறு இந்திய அரசிடமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமும் கோரிக்கை விடுத்துள்ளோம் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 43 தமிழக மீனவர்களை அமைச்சர் நேரில் சென்று சந்தித்தார்.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் "யாழ்ப்பாணம் சிறையில் உள்ள 43 தமிழக மீனவர்களை சந்தித்தேன். அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது பற்றி எடுத்து கூறினேன். அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டனர். 43 மீனவர்களில் இருவர் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளனர். ஏனைய 41 மீனவர்களுக்கும் இலங்கை அரசு மூலமாக அல்லது, எம்மால் முடிந்த உதவிகளை நிச்சயம் செய்வோம். இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என நம்புகின்றேன்.

வடக்கில் உள்ள மீனவர் கள் தமிழர்கள். போரால் பாதிக்கப்பட்டவர்கள் சிறிய படகுகளை வைத்துக்கொண்டுதான் அவர்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடத்துகின்றனர். அவர்களின் வாழ்வாதாரம் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது.

தமிழக மீனவர்கள் ரோலர் படகுகளைப் பயன்படுத்தி அதிகளவான மீன்களை பிடிக்கின்றனர். இலங்கை கடல் வளமும் சேதமடைகின்றது. இது கடல்சார் சட்டங்களையும் மீறும் செயலாகும். மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணுமாறு இந்திய அரசிடமும் இலங்கை ஜனாதிபதியிடமும் நாம் கோரிக்கை முன்வைத்துள்ளோம்." என அவர் தெரிவித்தார். (நி-33)

## குருபூஜை தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்படவுள்ள புண்ணிய நாச்சியம்மையார் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு 66 கல்லூரி வீதியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ பரிபாலன சபையின் தலைவர் உ.தயானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பட்டதாரி கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் செ. கண்ணதாசன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி)

## அநாதரவாக காணப்பட்ட இரும்புப் பெட்டியால் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகர்பகுதியில் நேற்று காலை இரும்புப் பெட்டியொன்று அநாதரவாக காணப்பட்டதால் அதில் வெடி குண்டு இருக்கலாம் என்ற அச்சம் காரணமாக பரபரப்பான சூழல் நிலவியது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அருகிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றது.

இதனையடுத்து அங்கிருந்தவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு தகவலளித்த நிலையில் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் குறித்த இடத்துக்கு விரைந்து பெட்டியை சோதனையிட்டனர்.

இதன்போது குறித்த பெட்டிக்குள் இயந்திர சாவிகள் காணப்பட்டமை தெரியவந்ததையடுத்து நிலைமை சுமூகமானது.

இதனையடுத்து பொலிஸார் குறித்த பெட்டியை அங்கிருந்து கொண்டு சென்றனர். (நி-33)



சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் இசை ஆராதனை நிகழ்வு யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.இந்திய துணைத் தூதரகம் ஏற்பாடு செய்த இந்த இசை ஆராதனை நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இசை ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.(படம்- சிவசாந்தன்)



யாழ்ப்பாணம் - நல்லூர் கிழக்கு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய தேர்த்திருவிழா கடந்த வியாழக் கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்- சிவசாந்தன்)

## உறவுகளால் கிளிநொச்சியில் பேரணி

(சாவகச்சேரி)

வடக்கு-கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டத்தின் 7 ஆம் ஆண்டு நிறைவு நாளை முன்னிட்டு கிளிநொச்சியில் அடையாள பேரணி இடம்பெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள மேற்படி பேரணியானது நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கந்த சுவாமி ஆலய முன்றலில் ஆரம்பித்து கிளிநொச்சி டிப்போ சந்தியில் நிறைவடையவுள்ளது. (நி-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 250 | 370 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 140 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 800 | 800 | 550 |
| தக்காளி | 800 | 700 | 700 | 1000 | 750 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 140 | 160 | 150 |
| கோவா | 450 | 450 | 500 | 500 | 600 |
| கரட் | 800 | 700 | 800 | 700 | 700 |
| பூசணி | 300 | 280 | 250 | 350 | 250 |
| புடோல் | 200 | 200 | 300 | 250 | 150 |
| வாழைக்காய் | 250 | 250 | 240 | 250 | 240 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 350 | 300 | 250-350 |
| பெரிய வெங்காயம் | 380 | 400 | 350 | 500 | 350-480 |
| பாகற்காய் | 400 | 400 | 500 | 400 | 480 |
| வெண்டக்காய் | 600 | 400 | 300 | 500 | 350 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 160 | 140 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 600 | 570 |
| லீக்ஸ் | 350 | 350 | 450 | 450 | 400 |
| பீற்றூட் | 300 | 250 | 400 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 800 | 500 | 1000 | 640 |
| முருங்கைக்காய் | 1200 | 1200 | 1200 | 1200 | 1200 |
| போஞ்சி | 400 | 500 | 450 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 300 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 80 | 50-90 |
| தேசிக்காய் | 150 | 200 | 250 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 100 | 70-110 | 50-110 |
| இராசவள்ளி | 400 | 400 | 350 | 400 | 400-500 |
| வெங்காயப்பூ | 200 | 180 | 300 | 300 | 170 |
| முள்ளங்கி | 100 | 100 | 300 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 60 | 120 |
| வல்லாரை | 60 | 250 | 50 | 80 | 80 |
| [illegible] | 100 | 100 | 100 | 200 | 100 |

## வாகன இலக்கத்தகடுகள் மக்களின் பார்வைக்காக

(யாழ்ப்பாணம்)

எமது தலைமை அலுவலகத்திலிருந்து 2024.02.08 ஆம் திகதி எமது அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற (வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசசெயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப்பலகையில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப்புத்தகம்,தேசிய அடையாள அட்டை என்பவற்றையும், வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும், யாழ் மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 428
Viber 076 636 3378


# மீண்டும் டில்லி சலோ!

## தலைநகரை ஸ்தம்பிக்க வைக்கும் விவசாயிகள் போராட்டம்

தலைநகரையே ஸ்தம்பிக்க வைக்கும் வகையில், டில்லியை நோக்கி ட்ரக்டர்களில் மீண்டும் படையெடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள் விவசாயிகள். எக்காரணம் கொண்டும் அவர்கள் டில்லிக்குள் நுழைந்துவிடக் கூடாது எனத் தடைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது மத்திய அரசு. பாராளுமன்றத் தேர்தலுக்கு நாடே தயாராகிக் கொண்டிருக்கும் நேரத்தில் விவசாயிகளின் 'டில்லி சலோ 2.0' போராட்டம் பல அதிர்வலைகளைக் கிளப்பியிருக்கிறது.

### மீண்டும் டில்லி சலோ

2020 ஆம் ஆண்டு, 'மத்திய அரசு கொண்டு வந்த மூன்று புதிய வேளாண் சட்டங்களும் விவசாயிகளுக்கு எதிரானவை. விவசாயத்தை கார்ப்பரேட் வசம் ஒப்படைக்கவே இந்தச் சட்டங்கள்' எனச் சொல்லி 'டில்லி சலோ' என்ற போராட்டத்தைத் தொடங்கினர் விவசாயிகள். பஞ்சாப், ஹரியானா, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலிருந்து ட்ரக்டர்களில் பேரணியாக டில்லியை நோக்கி வந்த விவசாயிகளை, கண்ணீர்ப் புகைக்குண்டுகளைக்கொண்டு கலைக்கப் பார்த்தது மத்திய அரசு. ஆனால், அதற்கெல்லாம் அசராத விவசாயிகள், சுமார் ஒன்றரை ஆண்டு காலம் டில்லியை முற்றுகையிட்டு நடத்திய போராட்டத்தால் மத்திய பா.ஜ.க அரசைப் பணிய வைத்தனர்.

2021 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் மூன்று வேளாண் சட்டங்களும் திரும்பப் பெறப்படுவதாக அறிவித்தார் பிரதமர் மோடி. கூடவே, விவசாயிகள் முன்வைத்த சில முக்கியமான கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருவதாக வாக்குறுதியளித்தது மத்திய அரசு. அதனால், போராட்டத்தைக் கைவிட்டு, டில்லியின் எல்லைகளிலிருந்து விவசாயிகள் கலைந்து சென்றனர். ஆனால், வாக்குறுதி அளித்தபடி விவசாயிகளின் எந்தவொரு கோரிக்கையையும் மத்திய அரசு தற்போது வரை நிறைவேற்றவில்லை. இதனால் ஆத்திரமடைந்த விவசாயிகள், 'ஆட்சியே முடியப்போகிறது... எப்போது எங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்?' என்ற கேள்வியோடு மீண்டும் டில்லியை நோக்கிப் படையெடுத்திருக்கிறார்கள்.

### தாக்கப்பட்ட விவசாயிகள்... போர்க்களமான எல்லைகள்

கடந்த பெப்ரவரி 8ஆம் திகதி தொடங்கி மத்திய அமைச்சர்கள் குழுவோடு நடத்தப்பட்ட பலகட்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிய, பெப்ரவரி 13ஆம் திகதி 'டில்லி சலோ 2.0' என்ற போராட்டத்தை முன்னெடுக்க விவசாய சங்கங்கள் முடிவு செய்தன. அதன்படி, டில்லியில் முகாமிட்டுப் போராட்டம் நடத்தத் தேவையான பொருட்களோடு விவசாயிகள் தயாராகினர். அவர்களைத் தடுத்து நிறுத்தும் முயற்சிகளை மத்திய அரசும் முடுக்கி விட்டிருக்கிறது. டில்லியின் சிங்கு, திக்ரி, காஜிப்பூர், ஷம்பு உள்ளிட்ட எல்லைப் பகுதிகளைப் பூட்டியதுடன், சிமெண்ட் தடுப்புகள், முள்வேலித் தடுப்புகள், பேரிகார்டுகள், லொறிகள் என எல்லையிலுள்ள சாலைகளில் அடுக்கடுக்கான பொருட்களைக் கொண்டுவந்து கொட்டியது மத்திய அரசு.

பஞ்சாப், ஹரியானா எல்லையான ஷம்பு பகுதி வழியாக விவசாயிகளின் ட்ரக்டர் பேரணி டில்லிக்குச் செல்ல முயன்ற நிலையில், பொலிஸார் டிரோன்கள் வழியாக கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி விவசாயிகள் மீது தாக்குதல் நடத்தினர். ரப்பர் குண்டுகளைக் கொண்டு துப்பாக்கிச்சூடு நடத்தியதில் பல விவசாயிகள் காயமடைந்ததாகவும் தெரிகிறது. பதிலுக்கு விவசாயிகளும் அங்கிருந்த தடுப்புகளை அகற்ற முயல, அந்த இடமே போர்க்களமானது. அன்றிரவு விவசாயிகள் சற்று அடங்கிய நேரத்தில், தகர்க்கப்பட்ட தடுப்புகளை நீக்கி விட்டு, புதிய தடுப்புகளை ஏற்படுத்தினர் பொலிஸார். மறுநாளான பெப்ரவரி 14ஆம் திகதி மீண்டும் டில்லியின் எல்லைக்குள் நுழையும் முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கினர் விவசாயிகள். டில்லி எல்லையில் மட்டுமின்றி, பஞ்சாப்பிலும் ரயில் மறியல் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள் விவசாயிகள்.




### 'விவசாயிகளா? தீவிரவாதிகளா?'

பா.ஜ.கவைச் சேர்ந்தவர்கள், 'சிலரின் தூண்டுதலால்தான் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது' என்று இந்தப் போராட்டம் குறித்து பேசத்தொடங்கியிருக்கிறார்கள். அஸ்ஸாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா 'இவர்கள் விவசாயிகளா? கொள்ளைக்காரர்களா?' என்று சமூக வலைத்தளத்தில் பதிவிட்டு நீக்கியிருக்கிறார்.

விவசாய சங்கங்களைச் சேர்ந்தவர்கள், 'நாங்கள் புதிய கோரிக்கைகளை முன்வைக்கவில்லை. ஏற்கெனவே, மத்திய அரசு உறுதியளித்திருந்த கோரிக்கைகளைத்தான் நிறைவேற்றித் தரச் சொல்கிறோம்.

இதற்கிடையே டில்லியிலுள்ள பவானா மைதானத்தில் விவசாயிகளைக் கைது செய்து அடைக்கத் திட்டமிட்டது மத்திய பா.ஜ.க அரசு. ஆனால், விவசாயிகளின் கோரிக்கை நியாயமானது. அரசியலமைப்பின்படி அமைதியாகப் போராட அவர்களுக்கு உரிமை உண்டு' எனச் சொல்லி மத்திய அரசின் கோரிக்கையை டில்லியை ஆளும் ஆம் ஆத்மி அரசு நிராகரித்து விட்டது.

"நியாயமான கோரிக்கைகளோடு போராட்டம் நடத்த வரும் விவசாயிகளை, தீவிரவாதிகள்போலத் தாக்க நினைக்கிறது பா.ஜ.க அரசு. சீன எல்லைப் பாதுகாப்பைப் பலப்படுத்தச் சொன்னால், டில்லியின் எல்லைகளில் பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொண்டிருக்கிறது" என்று விமர்சிக்கின்றன எதிர்க்கட்சிகள். விவசாயிகள் போராட்டம் தொடர்பாகத் தொடுக்கப்பட்ட பொதுநல வழக்குகளை விசாரித்த பஞ்சாப்-ஹரியானா உயர்நீதிமன்றம், "விவசாயிகள் போராட்டம் நடத்த உரிய இடத்தை அடையாளம் கண்டு ஒதுக்க வேண்டும். விவசாயிகள் போராட்டம் குறித்து மத்திய அரசு நீதிமன்றத்தில் பதிலளிக்க வேண்டும்" என உத்தரவிட்டிருக்கிறது. தற்போது, விவசாய சங்க பிரதிநிதிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறது மத்திய அரசு. 'பேச்சுவார்த்தை ஒருபுறம் நடந்தாலும் கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டத்தைக் கைவிடமாட்டோம்' என விவசாயிகள் அறிவித்திருக்கின்றனர்.

இந்தச் சூழலில் எம்.பி ராகுல் காந்தி, "நாங்கள் ஆட்சிக்கு வந்தால், விளைபொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கப்படும். இதன் மூலம் 15 கோடி விவசாயிகள் பலன் பெறுவார்கள். நீதிக்கான பாதையில் காங்கிரஸின் முதல் உத்தரவாதம் இது" என வாக்குறுதியளித்திருக்கிறார்.

பாராளுமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில், தலைநகரில் விவசாயிகள் ஒன்றுகூடுவது ஆட்சியை இழக்கும் நிலைக்கு இட்டுச் செல்லுமோ என்ற பயம் பா.ஜ.கவுக்கு ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளை அச்சுறுத்திப் பார்க்க நினைத்தால், தேர்தலில் அதற்கான விலையை பா.ஜ.க கொடுக்க நேரிடும்.

-ஜூனியர் விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற,

அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.சித்த மருத்துவர் பொ.இராமநாதன் அவர்கள் காலமாகிய செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** நிகழ்நிலைச் சட்டம் வந்திட்டுது. இனி யார் தொலைபேசியில் கதைத்தாலும் அதனை அரசாங்கம் பதிவு செய்து வைக்குமாம்.

ஆகையால எல்லாரும் கவனமாக இருக்க வேணும்.

**வாத்தியார்:-** விதானையார் சொல்லுறது உண்மைதான். பழைய நினைப்பில தொலைபேசியில ஏடா கூடமாகக் கதைத்து மாட்டுப்படாம இருந்தால் சரி.

அதோட விதானையாற்ற எச்சரிக்கையை இனி வினாத்தாள் தயாரிக்கிற ஆசிரியர்களுக்கும் விடுக்க வேணும் போல...

**மூப்பர்:-** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:-** நடந்து முடிந்த பத்தாம் வகுப்பு தமிழ் மொழிப் பாடத்தில், ஒரு நாடு இருதேசம்.

இந்த வாக்கியம் தனி வாக்கியமா... கூற்று வாக்கியமா.... எண்டொரு கேள்வி வந்ததல்லோ.

அந்தக் கேள்வி தொடர்பில் விசாரணை நடத்துமாறு பணிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

**மூப்பர்:-** இதென்ன நாசமறுப்பு.

**சாத்திரியார்:-** தனி வாக்கியம்... கூற்று வாக்கியம்... இதுகளுக்கு வேறொண்டும் கிடைக்காமல், ஒரு நாடு இருதேசம் எண்டது தான் அந்த வாத்தியாருக்குக் கிடைச்சிருக்குது போல.

**சிறாப்பர்:-** சில வேளை அந்த வாத்தியார் முன்னணியின்ர கொள்கையில கடுமையாக ஈர்க்கப்பட்டிட்டாராக்கும்.

**பண்டிதர்:-** வடக்கு மாகாணத்தின்ர கல்விக்கு என்ன கெடுகாலம் வந்ததோ தெரியல்ல. புது வருடம் பிறந்ததில இருந்து ஒரே பிரச்சினையாகத் தான் இருக்குது.


**சிறாப்பர்:-** என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்.

**பண்டிதர்:-** கல்வி அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது தேசியக் கொடியைத் தலைகீழாகக் கட்டியதால ஒரு பிரளயம் ஏற்பட்டது.

இப்ப அதைத் தொடர்ந்து ஒரு நாடு இருதேசம் எண்ட சிக்கல்.

அதோட நிண்டு போகு மெண்டால், மூன்றாம் தவணைப் பரீட்சையில பெருங் குழப்பம். தரம் 10 தமிழ் இலக்கிய நயத்தின்ர விடைத்தாளில உட்பக்கம் அச்சிடப்படாமல் இருந்திருக்குது.

அதோட கோப்பாய்க் கோட்டத்தில உள்ள சில பாடசாலைகளுக்கு மன்னார் வலயத்திற்குரிய வினாத்தாள்கள் வந்ததாகவும் கேள்வி.



## யாழ்ப்பாணத்துத் தென்னைகள் உயிரை விடப்போகுதல்லோ

**வாத்தியார்:-** தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின்ர வினாத்தாள்களை தவணைப் பரீட்சையாக வைக்கக் கூடாது எண்டு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் எடுத்த முடிவுதான் இவ்வளவு பிரச்சினைக்கும் காரணம்.

காலாகாலமாக நடத்தப்படும் பரீட்சை வினாத்தாளை நிறுத்திறதாக இருந்தால் அது தொடர்பில அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களிட்ட கருத்துக் கணிப்பு நடத்தவேணும்.

இதை விட்டுட்டு நினைத்தபாட்டில தீர்மானம் எடுத்தால் இப்படியான குழப்பங்கள் தான் வந்து சேரும். இவ்வாறு வாத்தியார் கூற அனைவரும் மௌனமாகினர்.

மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** முன்பெல்லாம் வட்டாரக் கல்வி அதிகாரி, கோட்டக் கல்வி அதிகாரி, வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு அதிகாரம் இருந்தது. அவர்களே தீர்மானங்களை எடுப்பினம். இப்ப உயர் மட்டத்திற்கு எல்லோரும் நடுங்குகினம்.

அவர்களில எவரும் ஆலோசனை சொல்றது மில்லை. சொல்லுறதுக்கு இடமும் கொடுப்பதில்லை.

ஏதோ தங்கட பதவிக் காலத்தைக் கழித்து விட்டுப் போனால் சரி எண்ட நிலைமை தான் இப்ப வட மாகாணத்தில இருக்குது.

**கங்காணி:-** இப்படியான நிலைமையைத் தடுக்க வேணும் எண்டால் அது விடயத்தில ஆளுநர் தலையிட வேணும்.

வட மாகாணத்திற்குட்பட்ட அத்தனை அரச அமைப்புகள் மீதும் ஆளுநர் கவனம் செலுத்துவாராக இருந்தால், எல்லாம் அந்த மாதிரி நடக்கும்.

வடமாகாணத்தில ஜி.ஏ சந்திரசிறி ஆளுநராக இருந்த போது எல்லா அமைச்சுகளும் திணைக்களங்களும் அந்த மாதிரி வேலை செய்தன. ஆனால் இப்ப ஆளுநர் விட்டுக் கொடுக்க, அவரவர் தத்தம் பாட்டுக்கு அரச நிர்வாகத்தைக் கட்டி ஆளுகினம்.

**சாத்திரியார்:-** சரி...சரி... நடைமுறைக்கு சாத்தியமற்ற கதைகளை விடுங்க.இப்ப எங்கட யாழ்ப்பாணத்தில வெள்ளை ஈ தொற்று அத்தனை தென்னைகளையும் அழிக்கப்போகுது.

அதிலும் வீடுகளில உள்ள செவ்விளநீர் தென்னை மரங்கள் அத்தனையும் வெள்ளை ஈ தாக்கத்தால உயிரை விடுகின்ற நிலையில இருக்குது.

இது விடயத்தில சம்பந்தப்பட்டவர்கள் வெள்ளை ஈ யை அழிக்கிறதுக்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.தவறினால் யாழ்ப்பாணத்தில கணிசமான தென்னை மரங்கள் அழிந்து போவதை யாராலும் தடுக்க முடியாது.

இவ்வாறு சாத்திரியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டா மணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காதலர் தினம் எப்படிப் போச்சுது வியாசரே?

**சுரேசன் பத்தமேனி**

**கால்நடை வளர்ப்பு, வீட்டுத் தோட் டம் என்பன கணிசமான பொருளா தார மீட்சியைத் தராதா?**

தென்பகுதி மக்களின் வீடுகளைப் பார்த்தால் நிச்சயம் அவர்களிடம் வீட்டுத்தோட்டம், கால் நடைவளர்ப்பு என்பன இருக்கவே செய்கின் றன.
இவை வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வ துடன் சிறிய வருமானத்தையும் பெற்றுத் தரும். ஈழத் தமிழினத்திடம் இது நிறையவே இருந்தது.
யார் கண்பட்டதோ வெளிநாட்டு மோகத்தால் கால்நடை வளர்ப்பையும், வீட்டுத் தோட்டத்தை யும் அவமரியாதையான செயல் என்று நினைத்து புறம் தள்ளிவிட்டார்கள்.எமக்கான தற்சார்பை தட்டிக் கழித்துவிட்டு வெளிநாட்டு மோகத்தில் மிதக்கும் எம்மவரை என்னவென்று சொல்லி விட.

**திகான் வடமராட்சி**

**வாழ்வில் இறப்பு ஒரு நாள் நிச்சயம் என்பதை உணர்ந்து நீங்கள் கூறும் அறிவுரை?**

உலக மாயைகளில் மரணம் ஒன்றே உண்மையானது. மரணத்தை வென்றவர்கள் யாருமில்லை என்பதே நிச்சயமானது.
வாழ்க்கைச் சக்கரம் உருண்டோடும் போது வாழ்வு மாறும்,மனித மனம் மாறும், உடல்வாகு மாறும் இறப்பை நோக்கிய மனித பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.
இவையே இந்த உலகில் அப்பழுக்கற்ற உண்மையைப் புலப்படுத்தி நிற்கும்.
இதைப் புரியாத பலர் பணம் சேர்த்து, பதவி சேர்த்து மனிதர்களை மதிக்காமல் நடந்து இறுதியில் தவித்த வாய்க்கு ஒரு வாய் தண் ணீர் விட ஆளில்லாமல் அந்தரித்து இறந்து போகின்றார்கள்.இதை மனிதன் புரிய வேண்டிய நேரத்தில் புரிய மாட்டான்.
அனைத்தும் கை மீறிப்போன பின்பு பண்பட்ட மனிதனாய் பேசத் தொடங்கி விடுவான்.

**விஜயதரன் உரும்பிராய்**

**இசை நிகழ்ச்சி என்ற பெயரில் யாழ்ப்பாணம் சீரழிந்து போகி றதே வியாசரே?**

எந்தக் குழப்பத்திற்கும் நாம் முன்னுதாரணம் ஆகிவிடக்கூடாது என்பதில் நாம் மிகவும் அவதான மாக இருக்க வேண்டும்.
ஏனென்றால் தமிழர் கலாசாரம் இன்றுவரை வாழ்கிறது என்றால் அதற்கு ஈழத் தமிழினமே காரணம் என்ற பேச்சு இந்தியத் தமிழரின் சிந்தனையாக இருக்கும் இவ்வேளையில், நாம் சின்னத் தனமாக நடந்து கொண்டால் அது முரண் தரவல்லது.
இவ்வாறான நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துபவர்கள் அதை ஒன்றிற்கு நூறு தரம் சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.
அதைவிட வார்த்தைகளை கவனமாக விட வேண் டும். அதை அளவு கணக்கின்றிவிட்டு விட்டால் அள்ள முடியாது. இவ்வாறு அவமானப்பட்டாக வேண்டும்.





**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில்**
**தோன்றிய**
**கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு**
**SMS செய்யுங்கள்**

**ராசா திருநெல்வேலி**

**பணம் சம்பாதிக்க நல்ல வழி ஒன்று சொல்லுங்கள் வியாசரே?**

பணம்தான் இந்த உலகில் அனை த்தையும் தீர்மானிக்கிறது.
அதுவே மனித கௌரவத்தைக் கொடு க்கிறது என்று நம்பும் மகனைத் திரு த்துவத ற்கு,
இன்று ஒரு நாள் மட்டும் பணத்தை குறிவைத்து வேலை செய்து பார் எனக் கட்டளையிடுகிறார் தந்தை.
மகனும் பணத்தின் மகிமையை தந் தைக்கு நிரூபிக்க வேண்டும் என்ற முனைப்புடன் கிடைக்கும் வேலை களைச் செய்து பணம் சேர்க்கிறான்.
ஒரு கட்டத்தில் அவருக்கு களைப்பு வந்து விட்டது.
நாவறண்டு தண்ணீர் என கத்துகிறான். யாரும் அவனைக் கண்டுகொள்ள வில்லை.
ஆனால் ஒரு பிச்சைக்காரர் தன்னிடம் இருந்த தண்ணீரை அவனுக்கு கொடு த்து அவன் தாகத்தை தீர்க்கிறார்.
கோடி பணத்திலும் மேலானது மனிதா பிமானம் என்பதை உணர்ந்த அவன் தனது சொத்துக்களை இல்லாதவர்களு க்கும் கொடுத்து மகிழ்ந்தான்.



ஹரிகரன் இசை நிகழ்ச்சியில் குழப்பம் ஏற்பட காரணம் என்ன வியாசரே?

**தீரா வரணி**

**காதலர் தினம் எப்படிப் போச்சுது வியாசரே?**

அதையேன் கேக்கிறீர்கள். பேஸ்புக் ஒண்டை ஓப்பின் பண்ணி பெண்களாய்ப் பார்த்து சினேகித தூது விட்டு. காலை வண க்கம், இரவு வணக்கம் போட்டு, சாப்பிட்டாச்சா என்று அக்கறை காட்டி உங்களைப் பார்க்க வேண்டும் என உசார் பண்ணி.
காதலர் தினத்தில் சந்திப்போம் என்று முடிவெடுத்து அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து நரைமுடி மறைத்து டை அடித்து ரிப்ரொப்பா வெளிக்கிட்டு சந்திக்கிற இடத்தில் போய் நிண்டன் அவளும் வந்தாள்.
எங்கேயோ பார்த்த சேப்பா இருக்குதெண்டு உத்துப் பார்த்தா அது எண்ட மனிசி. திகைச்சுப் போனன்.
ஏனெண்டா அவள் கையில ஒரு உருட்டுக் கட்டையோட நின்றாள்.
அடிவிள முன்னமே அலறினேன்.தோளில் தட் டிய மனைவி கேட்டாள் என்ன கனவா என்று.

**சுதன் குப்பிளான்**

**தமிழரசுக் கட்சிக்குள் நடைபெறும் துரோகங்கள் எப்பேற்பட்டது வியா சரே?**

தமிழ் தேசியம், தமிழ் தேசியப்பற்று என்பன 2009 உடன் முடிந்து போன கதை. இப்போது பதவிக்காக எந்த எல்லை வரை சென்று வரும் கலாசாரம் உள்ள அரசியலே தமிழ் பரப்பில் உள்ளது.
தாயக ஒற்றுமையை சீர்குலைக்கும் வகை யில் நடந்து, பதவியாசை கொண்டு அதில் பித்துக் கொண்டு பிசாசுகளாய் அலைந்து அது நடந்தாகவில்லை என்றவுடன் அல்ல க்கைகளை ஏவிவிட்டு அடிடா மேளம் போடுடா தடை என படம் காட்டிக் கொண்டு பக்கத் திலேயே இருக்கும் பதவியாசை பிடித்த பிசாசுகளை என்ன செய்யலாம் மக்களே?

**அம்மு யாழ்ப்பாணம்**


**ஹரிகரன் இசை நிகழ்ச்சியில் குழப் பம் ஏற்பட காரணம் என்ன வியாசரே?**

கட்டணமா அல்லது இலவசமா என்பதில் ஒழுங்குபடுத்துநர்கள் தெளிவாக இருந்திருக்க வேண்டும்.
பணம் அறவிடப் போவதென்றால் அதற்கான கட்டணத்தை அறவிடலாம். அல்ல இலவசம் எனின் இலவசமாகவே நடத்தியிருக்கலாம்.
ஒரு சாராருக்கு பணம் அவர்கள் முன் வரிசை யில். ஒரு சாராருக்கு இலவசம் அவர்கள் மேடைக்கு மிகமிகத் தொலைவில்.
ஹரிகரன் பாடல் பாடினார். சரி அவரைத் தெரியவில்லையென்றாலும் பரவாயில்லை காதால் கேட்போம் என்ற ரசிகர்கள், தமன்னா ஆடும் பொழுது அவரைப் பார்க்க முயற்சி த்திருக்கிறார்கள்.அந்த முயற்சி பெரும் குழப் பத்தில் முடிந்து விட்டது.
கட்டணம்- இலவசம் என்ற முரனே நிகழ்வு குழம்ப மிகப் பெரும் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

**படம் : சலங்கை ஒலி**
**இசை : இளையராஜா**
**பாடியவர்கள்: S.P.பாலசுப்ரமணியம், S.சயிலஜா**
**பாடலாசிரியர்: வைரமுத்து**



பெண்: வான் போலே வண்ணம் கொண்டு
வந்தாய் கோபாலனே
பூ முத்தம் தந்தவனே
வந்தாய் கோபாலனே
பூ முத்தம் தந்தவனே
ஆஹா வெண்ணிலா மின்னிடும்
கன்னியர் கண்களில்
தன்முகம் கண்டவனே
பல விந்தைகள் செய்பவனே

ஆண்: ஆ அ அ அ
வான் போலே வண்ணம் கொண்டு
வந்தாய் கோபாலனே பூ முத்தம் தந்தவனே

ஆண்: மண்ணைத் தின்று வளர்ந்தாயே
துள்ளிக்கொண்டு திரிந்தாயே

மண்ணைத் தின்று வளர்ந்தாயே
துள்ளிக்கொண்டு திரிந்தாயே

பெண்: அன்னையின்றித் தெரிந்தாயே
பெண்களோடு அலைந்தாயே
மோகனங்கள் பாடிவந்து மோகவலை விரித்தாயே

ஆண்: ஆ அ அ

பெண்: மோகனங்கள் பாடிவந்து
மோகவலை விரித்தாயே

ஆண்: சேலைகளைத் திருடி
அன்று செய்த லீலை பலகோடி
பொன்னான காவியங்கள் போற்றிப்
பாடும் காதல் மன்னா
வந்தாய் கோபாலனே பூ முத்தம் தந்தவனே

பெண்: ஆ அ அ வான் போலே வண்ணம் கொண்டு
வந்தாய் கோபாலனே பூ முத்தம் தந்தவனே

பெண்: பெண்களுடை எடுப்பவனே
தங்கைக்குடை கொடுப்பவனே
பெண்களுடை எடுப்பவனே
தங்கைக்குடை கொடுப்பவனே

ஆண்: ராசலீலை புரிந்தவனே ராஜவேலை தெரிந்தவனே
கீதையெனும் சாரம் சொல்லி
கீர்த்தியினை வளர்த்தாயே

பெண்: ஆ அ அ

ஆண்: கீதையெனும் சாரம் சொல்லி
கீர்த்தியினை வளர்த்தாயே

பெண்: கவிகள் உனை வடிக்க
காலமெல்லாம் நிலைத்தாயே
வானில் உந்தன் கானமெல்லாம்
இன்றும் என்றும் வாழும் கண்ணா
வந்தாய் கோபாலனே பூ முத்தம் தந்தவனே

ஆண்: ஆ அ அ
வான் போலே வண்ணம் கொண்டு
வந்தாய் கோபாலனே பூ முத்தம் தந்தவனே

பெண்: ஆஹா வெண்ணிலா மின்னிடும்
கன்னியர் கண்களில்
தன்முகம் கண்டவனே பல விந்தைகள் செய்பவனே

ஆண்: ஆஹா வெண்ணிலா மின்னிடும்
கன்னியர் கண்களில்
தன்முகம் கண்டவனே பல விந்தைகள் செய்பவனே

பெண்: ஆ அ அ
வான் போலே வண்ணம் கொண்டு
வந்தாய் கோபாலனே பூ முத்தம் தந்தவனே

# மாயவித்தைக்காரன்–பும்ரா

ரிவர்ஸ் ஸ்விங்கை முறைப்படுத்தி பேட்டர்களுக்கு எதிரான பெரும் ஆயுதமாக மாற்றியவராக இன்றளவும் இந்த சர்ஃப்ராஸை கிரிக்கெட் உலகம் கொண்டாடி வருகிறது. "அவரிடம் நொடிப்பொழுதில் பேட்டர்களின் கணிப்பை பொய்யாக்கி ஏமாற்றிவிடும் பந்துகள் இருக்கிறது. தீர்க்கமான யார்க்கர்களை வைத்திருக்கிறார். இந்திய அணியில் இவர் நீண்ட காலம் பயணிப்பார்." பும்ரா குறித்து சர்ஃப்ராஸ் நவாஸ் சில ஆண்டுகளுக்கு முன்பு கூறிய கருத்து இது.

அவர் சொன்னதைப் போலவே இந்திய அணியில் ஒரு நீண்ட வெற்றிப்பயணத்தை பும்ரா மேற்கொண்டு வருகிறார். இன்றைய திகதிக்கு டெஸ்ட் போட்டிகளில் நம்பர் 1 பந்துவீச்சாளர் அவர்தான். டெஸ்ட் போட்டிகளில் தான் வீசிய 6,781ஆவது பந்தில் தனது 150ஆவது விக்கெட்டை வீழ்த்தினார்.

இந்திய வேகப் பந்துவீச்சாளர்களில் மிக வேகமாக 150 விக்கெட்டுகளை வீழ்த்தியவரும் பும்ராதான். இந்தியா என்றால் சுழற்பந்துவீச்சு என்கிற கதையாடலை பும்ரா மாற்றி எழுதத் தொடங்கியுள்ளார். பும்ராவின் 150ஆவது விக்கெட்டாக வீழ்ந்தவர் பென் ஸ்டோக்ஸ். நல்ல லெங்தில் காற்றில் அலைந்து உள்ளே வெளியே ஆட்டம் காட்டி வந்த பும்ராவின் பந்தை கணிக்க முடியாமல் ஸ்டம்பை பறிகொடுத்திருந்தார்.

ஒரு இங்கிலாந்து பேட்டரை இப்படி திகைக்க வைத்த கடைசி இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜாகீர் கான் தான். 2011 உலகக்கோப்பையில் கையை விட்டுச் சென்ற ஆட்டத்தை தனது ரிவர்ஸ் ஸ்விங்குகளால் ஒரே ஸ்பெல்லில் மீட்டெடுத்து போட்டியை டை ஆக்கினார்.

பும்ரா நவீன தலைமுறையின் பிரதிநிதி. மூன்று ஃபார்மட்களிலும் ஆடுகிறார். ஐ.பி.எல் மேட்ச்களில் அதிக டிமாண்ட் இருக்கக்கூடிய பௌலர். ரிவர்ஸ் ஸ்விங்கை கற்றுக்கொண்டு மேதமை அடைவதிலிருந்து அவரை சிதறடிக்க எக்கச்சக்கமான காரணங்கள் இருந்தன. ஆயினும் அவர் சிரத்தை எடுத்து ரிவர்ஸ் ஸ்விங்கின் மீது நம்பிக்கை வைத்து அதை கட்டுக்கோப்பாக வீசிக்கொண்டிருக்கிறார்.

எப்படி நிகழ்ந்தது என்றே தெரியாமல் ரிவர்ஸ் ஸ்விங்கை அவ்வப்போது வீசும் பௌலர்கள் ஒரு வகை. இன்னொரு வகையினருக்கு எல்லாமே அங்குலம் அங்குலமாகத் தெரியும். பந்து எவ்வளவு பழையதாகி இருந்தால் எந்த ஆங்கிளில் பிடித்தால் பேட்டரின் கணிப்புகளை பொய்யாக்கலாம் என எல்லாமே தெரிந்திருக்கும். பும்ரா இந்த இரண்டாம் வகை.

ரிவர்ஸ் ஸ்விங் எனும் கலையை கெட்டியாகப் பிடித்து வைத்திருந்த பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து வீரர்களுக்கே பும்ராவின் ரிவர்ஸ் ஸ்விங்குகளை பார்க்கையில் ஆச்சரியமும் பொறாமையும் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. "90 மைல் வேகத்தில் வீசுகிறார். ரிவர்ஸ் ஸ்விங்கையும் அற்புதமாகச் செய்கிறார்.

டெஸ்ட் போட்டிகளில் நம்பர் 1 பந்துவீச்சாளராக ஆனவுடன் தனது இன்ஸ்டா பக்கத்தில் தனக்கு கிடைக்கும் பாராட்டுகளையும் கடினமான காலகட்டங்களில் தனக்கு கிடைக்கும் ஆதரவுகள் குறித்தும் பும்ரா ஆதங்கத்தோடு ஒரு பதிவை வெளியிட்டிருந்தார். அப்படி ஒரு பதிவை வெளியிடக் காரணம். அவர் மீது வைக்கப்பட்ட விமர்சனங்கள். "மரபார்ந்த பந்துவீச்சு ஸ்டைலைக் கடந்து ரொம்பவே புதிதான, அந்நியமான ஸ்டைலில் பும்ரா பந்து வீசுகிறார். இந்த வகையான பந்துவீச்சு இருபது-20 போட்டிகளுக்கு மட்டுமே சரிப்பட்டுவிடும். டெஸ்ட் போட்டிகளில் பும்ரா அம்பலப்பட்டுவிடுவார். மேலும், இப்படி ஒரு ஸ்டைலோடு அவரால் அதிக டெஸ்ட் போட்டிகளில் ஆட முடியாது" என்று பலவாறாக அவர்மீது விமர்சனங்கள் வைக்கப்பட்டன. காயம் ஏற்பட்டு ஒரு வருடம் அவர் ஓய்விலிருந்த போதுமே, "ஏதோ ஒரு ஃபார்மட்டிலிருந்து குறிப்பாக டெஸ்ட் போட்டிகளிலிருந்து அவர் விடைபெறுவது நல்லது" என்பது மாதிரியான அறிவுரைகளும் சொல்லப்பட்டன. பேட்டர்களை ஏமாற்றும் ரிவர்ஸ் ஸ்விங்குகளை போல விமர்சகர்களையும் ஏமாற்றி பும்ரா வென்றிருக்கிறார். உலகின் எந்த பிட்ச்சில் ஆடினாலும் தாக்கம் செலுத்தும் அளவுக்கு ஒரு இந்திய பௌலர் சாதிப்பது இந்திய கிரிக்கெட்டுக்கே பெருமை தருணம்.

"ஒரு பௌலராக உங்களின் ஆகச்சிறந்த நண்பனாகவும் ஆயுதமாகவும் உங்களின் பந்துதான் இருக்க வேண்டும். நீங்கள் பந்துடன் பேச வேண்டும். பந்து என்ன செய்யப்போகிறது, எங்கே திரும்பப் போகிறது, கட் ஆகப்போகிறதா? ரிவர்ஸ் ஸ்விங் ஆகப்போகிறதா? என்பதெல்லாம் உங்களுக்கு முன்பே தெரிய வேண்டும்" என கபில்தேவ் சொல்வார். பும்ராவுக்கும் பந்துக்குமான உறவு இப்படித்தான் இருக்கிறது. பும்ரா செய்ய நினைப்பதை அப்படியே அவர் கையில் இருக்கும் பந்து செய்து முடிக்கும்.

**"ஒரு பௌலராக உங்களின் ஆகச்சிறந்த நண்பனாகவும் ஆயுதமாகவும் உங்களின் பந்துதான் இருக்க வேண்டும். நீங்கள் பந்துடன் பேச வேண்டும்"**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டிலிருந்து தொழிலதிபர் ஒருவர் ரமணாஸ்ரமத் துக்கு வந்திருந்தார். ரமண மகரிஷியிடம் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். "எனக்கு ஞானம் வேண்டும். என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றார்.

ஒரு கணம் வந்திருந்தவரை உற்றுப் பார்த்தார் ரமணர். "சரி. சிறிது காலம் ஆஸ்ரமத்தில் தங்கியிருங்கள்" என்றார்.

சில நாட்கள் கழிந்தன. முதல் பூஜை முடிந்து சிலரிடம் உரையாற்றிக்கொண்டிருந்தார் ரமணர். அப்போது தொழில திபரைப் பார்த்துக் கேட்டார்..."நேற்று இரவு என்ன சாப்பிட்டீர்கள்?"

"ஆறு இட்லிகள் சாப்பிட்டேன்."



# தெளிவுறுதல் எனும் சூட்சுமம்

ரமணர் வேறு எதுவும் சொல்லாமல், மற்றவர்களுடன் உரையாடலைத் தொடர்ந்தார்.

அதற்குப் பிறகு தொழிலதிபரைப் பார்த்தால் ஒரு புன்னகை மட்டும் புரிவார் ரமணர். இரு வாரங்கள் கழிந்தன. தொழிலதிபரிடம் ரமணர் கேட்டார்... "இன்று என்ன சாப்பிட்டீர்கள்?"

"ஒரு சப்பாத்தி."

ரமணர் புன்னகைத்தபடி அவரைக் கடந்து போனார்.

அந்தத் தொழிலதிபருக்கு ரமணரோடு நிரந்தரமாகத் தங்கி யிருக்க வேண்டும் என்கிற ஆசை. ஆனால் ரமணரோ அதிகம் பேசுவதேயில்லை.

ஒரு மாதம் கடந்திருக்கும். "இன்று என்ன சாப்பிட்டீர்கள்?" அதே கேள்வி. அதற்குத் தொழிலதிபர் சொன்னார்... "இன்று உணவு சாப்பிட்டேன்."

ரமணர் தன் வலக்கரத்தை உயர்த்தியபடி சொன்னார்...

"நண்பரே, இனி ஞானத்தைத் தேடி நீங்கள் அலையவேண்டியதில்லை. ஞானத்தை உணரும் பக்குவம் உங்களுக்கு வந்துவிட்டது. நீங்கள் திரும்பிச் செல்லலாம்."

'தெளிவுறுதல்' என்கிற சூட்சுமத்தை அந்தத் தொழிலதிபர் பெற்றதைத்தான் அப்படிச் சுட்டிக்காட்டினார் ரமணர்.

அது கைகூடினால், ஞானமும் கைகூடும். இட்லி, சப்பாத்தி என்கிற வடிவங்களைத் தாண்டி, அது உணவு என உணரும் பக்குவம் அந்த மனிதருக்கு வந்து விட்டிருந்தது.

நம் ஆட்கள் உணவு விடயத்தில் காட்டும் அக்கறை இருக்கிறதே... 'அடேங்கப்பா' ரகம்.

நாய் பிஸ்கட்டுகளைத் தயாரித்து வந்தது ஒரு அமெரிக்க நிறுவனம். ஆனால், விற்பனையோ மந்தமாக இருந்தது. காரணத்தை அறிய அதிகாரிகள் கூட்டம் போட் டார்கள்.

"நமது விளம்பரம் பிரமாதம்" என்றார் ஒருவர். "தரமான தயாரிப்பு" என்றார் இன்னொருவர். பலகட்ட பேச்சுக்குப் பிறகு தலைமை நிர்வாகி சலிப்புடன் கேட்டார்... "பிறகு ஏன் சரக்கு விற்பனை ஆகவில்லை?"

ஓர் அதிகாரி சொன்னார்... "நாய்களுக்கு நம் பிஸ்கட் பிடிக்கவில்லை."

# விடுதலைப் புலிகளை ஆதரித்தால்; விசாரணை வளையத்துக்குள் சீமான்

தமிழ்நாட்டில், ஆளுங்கட்சியான தி.மு.க அமலாக்கத் துறையால் நெருக்கடிகளைச் சந்தித்து வந்த நிலையில், ஆட்சி அதிகாரத்தில் இல்லாத நாம் தமிழர் கட்சியும் என்.ஐ.ஏ வளையத்துக்குள் சிக்கியிருப்பது அரசியல் களத்தில் பேசுபொருளா கியிருக்கிறது. சோதனை, சம்மன், விசாரணை என நா.த.கவை அதிரடித்த என்.ஐ.ஏ ரெய்டின் பின்னணி விவகாரங்கள் இங்கே!

2022, மே மாதம் சேலம் ஓமலூர் அருகே வாகன சோதனை யின்போது ஆயுதங்களுடன் இரண்டு பேர் கைதானார்கள். பொலிஸ் விசாரணையில், அவர்கள் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பால் ஈர்க்கப்பட்டு, தமிழ்நாட்டில் அது போன்ற ஓர் அமைப்பைக் கட்டமைக்க முயன்றதாகவும் யூடியூப் பார்த்து ஆயுதம் தயாரிக்க முயன்றதாகவும் தெரியவந்தது.

இதற்கிடையே அந்த வழக்கு என்.ஐ.ஏஇற்கு மாற்றப்பட்டு மேலும் ஒருவர் கைதானார். அதன் தொடர்ச்சியாக, கைதான மூவருக்கும் நாம் தமிழர் கட்சியினருடன் தொடர்பு இருப்பதாகச் சந்தேகித்தது என்.ஐ.ஏ. அதையொட்டி, கடந்த பெப்ரவரி 2ஆம் திகதி நாம் தமிழர் கட்சியின் கொள்கைப் பரப்பு செயலாளர் சாட்டை துரைமுருகன் உள்ளிட்ட ஏழு நிர்வாகிகள் வீட்டில் என்.ஐ.ஏ ரெய்டு நடத்தியது. அவர்களின் வீடுகளிலிருந்து ஒரு லப்டப், ஏழு செல்போன்கள், எட்டு சிம் கார்ட்டுகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன.

கூடவே, சோதனைக்கு உள்ளானவர்கள் மட்டுமன்றி, வேறு சில நா.த.க நிர்வாகிகளுக்கும் சம்மன் வழங்கி விசாரணைக்கு ஆஜராகச் சொன்னது என்.ஐ.ஏ தரப்பு. அதன்படி, சாட்டை துரைமுருகன், இடும்பாவனம் கார்த்திக், இசைமதிவாணன், விஷ்ணு பிரசாத் ஆகியோரிடம் விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது.

அவர்களிடம் நூற்றுக்கணக்கான கேள்விகள் கேட்கப்பட்டதோடு, அவர்களது செல்போன்களையும் என்.ஐ.ஏ சோதனை செய்திருப்ப தாகத் தெரிகிறது.

"என்.ஐ.ஏ விசாரணைக்கு ஆஜரான நா.த.க நிர்வாகிகளிடம் எட்டு மணி நேரத்துக்கு மேல் விசாரணை நடைபெற்றது. அதில் சேலம் வழக்கில் கைதான மூன்று இளைஞர்கள் குறித்து வெறும் அரை மணி நேரம் மட்டுமே விசாரித்திருக்கிறார்கள்.


மற்ற கேள்விகள் அனைத்துமே புலிகள் அமைப்பைச் சேர்ந்த முக்கியப் புள்ளி ஒருவரோடு நா.த.க நிர்வாகிகளுக்குத் தொடர்பு இருப்பதான சந்தேகத்தின் அடிப்படையிலேயே கேட்கப்பட்டிருக் கின்றன. 'நீங்கள், விடுதலைப் புலிகள் ஜிந்தாபாத்' எனப் பேசும்போது எங்கள் கைகள் கட்டப்பட்டிருக்காது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், எல்.டி.டி.ஈ ஆதரவைக் கைவி டுங்கள்' என்று மிரட்டல் தொனியில் எச்சரித்திருக்கிறார்கள்."

நாம் தமிழர் நிர்வாகிகளோ, இது பா.ஜ.கவின் அப்பட்டமான பழிவாங்கும் நடவடிக்கை என் சமூக வலைத்தளங்களில் பேசிவருகிறார்கள். இது குறித்து தமிழ்நாடு பா.ஜ.கவின் துணைத் தலைவர் நாராயணன் திருப்பதியிடம் விளக்கம் கேட்டபோது, நாட்டின் முன்னாள் பிரதமரைக் கொன்றவர்களுக்கு ஆதரவாகப் பேசுவதும் நிதி திரட்டுவதும் தேசத்துரோகம்.

போதிய முகாந்திரம் இல்லாமல் என்.ஐ.ஏ போன்ற அமைப்பினர் இது போன்ற சோதனைகளில் ஈடுபட மாட்டார்கள். பல மேடைகளில், 'பிரபாகரனோடு சாப்பிட்டேன், துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்றேன்' என்றெல்லாம் அந்தக் கட்சித் தலைவர் பேசியிருக் கிறாரே. இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இயக்கத்தை மீண்டும் சிலர் மலர வைப்பதாகக் குற்றச்சாட்டுகள் வரும்போது, யாராக இருந்தாலும் விசாரிக்கப்பட வேண்டியவர்கள்தான்.

ஒருவேளை தக்க சாட்சியங்கள் கிடைத்தால் நா.த.கவை தடைசெய்யக் கோருவதிலும் எந்தத் தவறும் இல்லையே" என்றார் அவர்.


விசாரணைக்கு ஆஜரான இடும்பாவனம் கார்த்திக் பேசும்போது, என்.ஐ.ஏ விசாரணையின்போது கட்சி நிதி குறித்து என்னிடம் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. இது போன்ற நடவடிக்கைகளால் புலிகளை ஆதரிக்கும் எங்கள் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இருக்காது" என்றார்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## புரிந்துணர்வு பூக்கட்டும்



வலைப்பின்னலுக்குள்
வாழ்க்கை நுழைந்து
முகநூலுக்குள்
முகம் புதைத்து
அகவாழ்க்கை
கலைந்த போன
தமிழர் வாழ்க்கை
தலைநிமிர
தலைமைத்துவ
போட்டிகள் வேண்டாம்
பிரிவுகளான உரிமை
புரிந்துணர்வால்
பூக்கட்டும் யதார்த்தம்
காத்து

தமிழினியன், வவுனியா.

## மகிழ்ச்சி காணலாம்

மனிதனாக வாழ்வதற்கு
பண்பு வேண்டுமே-மண்ணில்
மகிழ்ச்சியாக வாழ்வதற்கும்
அறிவு வேண்டுமே- இனிய
வாழ்வு என்பதற்கும்
மகிமை வேண்டுமே- என்றும்
துணிவு கொண்டு வாழ்வதற்கும்
மனது வேண்டுமே

இனிமை பேணி வாழ்வதற்கு
இளமை வேண்டுமே - மனிதர்
மனிதராக வாழ்ந்து கொள்ள
தெளிவு வேண்டுமே-என்றும்
அருமையான வாழ்வு காண
அமைதி வேண்டுமே- இனிமை
கண்டு புதுமை கொள்ள
தெளிவு வேண்டுமே

சிந்தனைக்கும் சிரிப்பதற்கும்
அறிவு வேண்டுமே-மனதில்
அமைதி கொண்டு வாழ்வதற்கும்
பொறுமை வேண்டுமே-மனிதன்
செம்மையான வாழ்வு காணின்
மனதை வெல்லலாம் - என்றும்
உண்மையோடு மனதை வைத்தால்
மகிழ்ச்சி காணலாம்

வளவைவளவன்.

## காலத்தின் குரல்

சரியைச் சரியெனவும்
தவறை தவறெனவும்
சரிவரப் புரிந்துகொள்ளும் போது
மொழியற்று முடங்கிவிடுகிறது மனம்..
இருத்தலுக்கும் இறத்தலுக்கும்
நடுவில் நலிந்து கிடக்கிறது ஆன்மா..


ஆளுக்கொரு சரியை
சரியென வைத்துக்கொள்கிறார்கள்..
ஓர் உணர்தலையும்
ஒரு தெளிதலையும்
கருணை முத்தமிட்டுக் கொள்கிறது..
அந்தக் கருணை,
சரியாமல் வைத்திருக்கட்டும் சரியை..

வாழ்வியலோடு
வளைந்தும் நெளிந்தும்
வாழப்பழகிக்கொள்ள
விடை தெரியாத வினாக்களோடு
சமரசம் செய்து கொள்ள வேண்டும்
என ஒரு அசரீதி கேட்கிறது..

ஆம்
அது காலத்தின் குரல்..
வலிதாங்கி வலிமை பெறல்
என்பது மோன நிலை..
எடுத்தெறிந்த
எல்லாக் கற்களிலும்
ஏதோ ஒரு மோனச் சிலை
சட்டென்று உருப்பெறுகின்றது..

சங்கரி சிவகணேசன்.

## மௌனத்தின் தேடல்-703



### துன்புறுவோர்

அதிகார வீம்புகளின்
அநியாய அட்டூழியங்களை
எதிர்த்துக் குரலிடுவோரை
இம்சிக்கும் ஆதிக்கக் காவலர்
இதையும் படம் பிடித்து
இணைய விருப்புகள் வாங்க
அவாவுறும் இணைய வாசிகள்
அவலப்படுவோரை
மனிதமாய் பார்ப்பது யார்?

சி.இ.அனிபுதுரை, மானிப்பாய்.

### வேலியும் பயிரும்

தக்கசமயத்தில் படையினர்
மக்களைக் காப்பாற்றவே
படை கூமுரையுடன் தொடரும்
அமைச்சென்னும் குறளில்
வள்ளுவப் பெருமான் புறம்
தள்ளி வைக்காமல் படையை
முதன்மைப்படுத்தினார் மாறாக
தன்னைச் சார்ந்தவர்கள் என்று
எண்ணிப் பார்க்காமல் கை வைப்பது
எய்தவனிருக்க அம்பை மட்டும்
ஏன்! எய்கிறீர்
வேலியே பயிரை மேய்தலுக்கு
மேலிடத்து ஏவலே காரணமாகும்

அரு.கனகராசா, சாவகச்சேரி.

### காட்டுமிராண்டித்தனம்

ஜனநாயகம் என்ற பெயரில்
ஜனங்களின் மத்தியில் அடாவடித்தனம்
சீருடை அணிந்த சிப்பாய்கள் எல்லாம்
சிதைத்தனரே இளைஞனின் இதயத்தை
காவல் காக்கும் வீரர்களின் காட்டுமிராண்டித்தனம்
சுக்குநூறாக்கி விட்டதே அவனின் கனவலைகளை
உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில்
உதவி செய்ய யாருமற்ற அநாதையாய்
நடுவீதியில் இருதலை கொள்ளி எறும்பு போல்
நாதியற்று நிற்கும் நிலையை எண்ணிப் பார்க்கையில்
நடுங்குதையா மேனி எல்லாம்

ஆ.செல்வி, திருநாவலூர்.

### அடக்குமுறை

ஜனநாயக குரல் ஓங்கி ஒலிக்க
வீதியில் போராட்டம்
பொலிஸாரின் அராஜகம்
நீதிக்கு சாவு மணி அடித்து
மக்களை கைது செய்து
ஜனநாயக குரல்வளையை நசுக்கும்
அரச பயங்கரவாத அடக்குமுறை

இம்பவாழியான், உடுப்பிட்டி.

### என்ன செய்வாள்!

புத்தகப் பைக்குள் கூடவே
ஒரு குடிநீர்ப் போத்தல்
சத்தான பழரசப் பானி
கொண்டுவரும் உன்
அன்புக் கல்லூரித் தோழி
நீ அகங்கையால் அள்ளி
நீர் அருந்தும் காட்சி கண்டால்
உன்னை அணைப்பாளா!
இல்லை அகம்பாவம் கொள்வாளா?

பி.யதுர்சன், கொக்குவில்.

### அமைதியின் அர்த்தம்

உரிமை மறுப்பு உரிமை மறுப்பு
எதுக்கு இந்த உரிமை மறுப்பு
தலையை நிமிர்த்து தலையை நிமிர்த்து
உரிமை பெற்றிட நெஞ்சை நிமித்து
கொடுமை கண்டு கொதித்தெழுந்தோம்
கோரப்பற்களை பிடுங்கி எறிவோம்
அமைதிக்குப் பின்னே பூகம்பம்
அதுவே தமிழன் அமைதியின் அர்த்தம்

மாவை.நா. கஜேந்திரன்.

## மௌனத்தின் தேடல்- 704



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தேன்றும் கவிதை, விவாசர் பதில்களை
ஆசிரியர், மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலத்தின் பதிவு 97

# கடல் புறா

"உங்கள் துணைவிகளில் எவ்வளவு பேர் மனைவிகள்? எத்தனை பேர் ஆசை நாயகிகள்?" என்று சீறிய இளையபல்வன், "நெறியற்ற உங்கள் சாட்சியம்தான் பலவர்மனுக்குத் தேவை போலிருக்கிறது? பூர்வ குடிகளிடம் கிலி பிடித்த பேடிகளென்று உங்களை நேற்றே புரிந்து கொண்டேன்.

காதலரை வெறிக்க வெறிக்க வெட்கங்கெட்டுப் பார்த்துப் பலவர் மனுக்குச் சாட்டி சொல்லக் கூட்டம் கூடும் கயவர்கள் என்பதையும் இன்று அறிந்து கொண்டேன்.

சென்று சொல்லுங்கள் பலவர்மனிடம், இந்த மஞ்சளழகியை நான் மணக்கத் தயார் என்று. இன்று பகலில் கோட்டை மாளிகையில் சந்திப்பதாகச் சொல்லுங்கள். அந்த சூழ்ச்சிக்காரனிடம்" என்று மிக வேகமாகக் கூறிவிட்டு, "மஞ்சளழகி! நீ மாளிகைக்குச் செல், சீக்கிரம் வருகிறேன்." என்று அவளை நோக்கிச் சொல்லி விடை பெற்றுக்கொண்டு விடு விடு என்று தன் படகிருந்த இடத்தை நோக்கி நடந்தான். அதற்குப் பிறகு கரையைத் திரும்பிப் பார்க்காமலே படகின் துடுப்புகளைத் துழாவித் தன் மரக்கலத்தை நோக்கிச் சென்றான். மரக்கலத்தை அடைந்து தன் அறைக்குச் சென்று மாற்று உடை அணிந்ததும் தன் உபதலைவர்களைத் தன் அறைக்கு அழைத்து வரும்படி மாலுமியொருவனுக்குக் கட்டளையிட்டான்.

உபதலைவர்கள் அனைவரும் அறையில் கூடியதும் இளையபல்லவன் கடற்கரையில் நடந்த அனைத்தையும் ஒளிவு மறைவின்றி அவர்களிடம் விபரித்துவிட்டு "தலைவர்களே! மிகுந்த ஆபத்தான நிலையில் நாமிருக்கிறோம். இங்கேயே நாம் தங்கினால் அக்ஷயமுனையைக் காக்கும் பொறுப்பு, அதாவது பயங்கரமான பூர்வக்குடிகளை எதிர்த்து நிற்கும் கடமை நம்மீது சுமரும். நாம் சென்று விட்டால் எப்படியும் பூர்வக்குடிகள் அக்ஷயமுனை வாசிகளைப் பழி வாங்குவார்கள். கொலையும் கொள்ளையும் நடக்கும். அதற்குப் பொறுப்பும் நாமாவோம். அது மட்டுமல்ல" என்று சற்றுப் பேச்சை நிறுத்தினான்.

"சொல்லுங்கள்," என்றான் அமீர்.

"கடலில் நம்மை அகூதா பழி வாங்கினாலும் வாங்கலாம் என்றான் இளையபல்லவன்.

"நம்மையா!"

"ஆம்."

"ஏன்?"

பெண்ணின் கற்பு பாதிக்கப்படுவதை மட்டும் அகூதா விரும்புவதில்லையாம்."

இதைக் கேட்டதும் வியப்பிலாழ்ந்த உபதலைவர்களில் கண்டியத்தேவன் சொன்னான் "விசித்திரமாயிருக்கிறது இது" என்று.

"ஆம் எனக்கும் விசித்திரமாகத் தானிருக்கிறது முதலில். இப்பொழுது நினைத்துப் பார்க்கும்பொழுது முற்றும் உண்மையென்று தெரிகிறது. சென்ற ஒரு வருட அனுபவத்தில் பெண்களை மானபங்கப்படுத்துவதை மட்டும் அகூதா அனுமதிக்கவில்லை."

"ஆம், ஆம்" என்று பதிலுக்கு எழுந்தன உப தலைவர்களின் குரல்கள்.

## வினை விதைத்தலும் வினை அறுத்தலும்

இதை அடுத்து அறையில் மௌனமே சில விநாடிகள் நிலவியது. மௌனத்தை முதலில் அமீரே உடைத்தான். "இப்பொழுது நாம் செய்ய வேண்டியது என்ன?" என்று வினவினான்.

"நான் இங்கு தங்கப் போகிறேன்" என்று உறுதியுடன் கூறினான் இளையபல்லவன்.

"நாங்கள்?" அமீர் கேட்டான் வறண்ட குரலில்.

"நீங்கள் ஒன்று இந்த ஆபத்தில் பங்கு கொள்ளலாம்.

அல்லது மரக்கலத்தை உங்களுக்கு அளிக்கிறேன். நீங்கள் தமிழகம் செல்லாம்" என்றான் இளையபல்லவன்.

"மரக்கலம் செல்லும் நிலையில் இல்லை." என்று கண்டியத்தேவன் சுட்டிக்காட்டினான்.

"அதற்கு வசதி செய்து தருகிறேன்" என்றான் படைத்தலைவன்.

"நீங்களா?"

ஆம். மஞ்சளழகியை மணந்து கொள்ள ஒப்புக் கொண்டு அக்ஷயமுனைக் கோட்டையின் காவல் பொறுப்பை ஏற்றால் பலவர்மனுக்கு அடுத்த அதிகாரி நான்தான். உங்களுக்குத் தேவையான சகலதையும் அளிக்க என்னால் முடியும்."

(தொடரும்...)

# 5 முறை புற்றுநோய் பாதிப்பு; 11 அறுவை சிகிச்சைகள்... மீண்டெழுந்த பிரிட்டிஷ் பெண்!

ஐந்து முறை புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண், தற்போது நோயில் இருந்து முற்றிலும் விடுபட்டு உடற்பயிற்சி சவால்களில் ஈடுபட்டு வருவது பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது.

இங்கிலாந்தின் ஒல்ட்ஹாமுக்கு அருகிலுள்ள சாடர்டனில் வசித்து வருபவர் நடாலி யேட்ஸ் போல்டன். 57 வயதான இவர், இரண்டு குழந்தைகளுக்கு பாட்டி இவர் ஹாட்ஜ்கின்ஸ் லிம்போமா என்ற புற்று நோயால் இரண்டு முறையும் மார்பகப் புற்றுநோயால் மூன்று முறையும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்.

இவருக்கு இதுவரையில்11அறுவை சிகிச்சைகளும் 30 முறை கீமோ தெரபி, 55 ரேடியோதெரபி வழங்கப்பட்டு இருக்கிறது. சால்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் மூத்த செவிலியர், "கடந்த ஆறு ஆண்டுகளாக palbociclib என்ற புற்றுநோய் மருந்தை எடுத்துக் கொண்ட பிறகு அவர் புற்றுநோயில் இருந்து முற்றிலும் குணமடைந்துள்ளார்" என்று கூறியிருக்கிறார்.

**66 வயதில் 5 முறை பாதிப்பு...**

நடாலி தனது 22 வயதில் சர்ரே பல்கலைக்கழகத்தில் மூன்றாம் ஆண்டு செவிலிய மாணவியாக படித்துக் கொண்டிருந்தார். அப்போது ரத்தத்தில் உள்ள வெள்ளையணுக்கள் கட்டுப்பாட்டை மீறி வளரும் ஹாட்ஜ்கின் லிம்போமா என்ற புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இருப்பதை அறிந்தார். தனது படிப்பை நிறுத்த விரும்பாமல் ரேடியோதெரபி சிகிச்சை எடுத்துக் கொண்டே நரம்பியல் வார்டில் பணியாற்றினார்.

37 வயதில் திருமணமாகி இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றார். அந்த சமயத்தில் அவருக்கு முதுகு வலியும் தோலில் அரிப்பும் ஏற்பட்டுள்ளது. ஸ்கான் செய்து பார்க்கையில் இதயத்தில் உண்டான கட்டி ஒன்று உணவுக் குழாயை அழுத்தி இருந்தது தெரிய வந்தது. அவர் மீண்டும் லிம்போமாவால் பாதிக்கப்பட்டு இருப்பதை அறிந்தார். குடும்பத்



தினரின் ஆதரவோடு 2004 இல் இரண்டாவது முறையாகத் தனது சிகிச்சையை முடித்தார்.

2009இல் 43 வயதான போது அவருக்கு மார்பகப் புற்று நோய் இருப்பது கண்டறியப்பட்டது. கீமோ தெரபி மற்றும் ரேடியோதெரபியை தொடர்ந்து அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மூன்றாவது புற்றுநோயைக் கடந்த ஒரு வருடத்தில், நான்காவது முறையாக அவருக்கு மார்பகத்தின் ஒரு பக்கத்தில் கட்டி இருப்பது தெரிந்தது. அது புற்றுநோய் கட்டி எனக் கண்டறியப்பட்ட பின்னர், அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது.

2017இல் ஐந்தாவது முறையாக மீண்டும் அவர் புற்று நோயால் பாதிக்கப்பட்டு இருப்பது தெரிந்தது. அதிலிருந்தும் அவர் வெற்றிகரமாக வெளியே வந்துள்ளார்.

தற்போது 66 வயதான தன் கணவர் கேரி, மகள்கள் லூசி மற்றும் இந்தியாவுடன் நேரம் செலவிடுகிறார். இவருக்கு ஃபின்லி மற்றும் ஒலிம்பியா என்ற இரண்டு பேரக் குழந்தைகளும் உள்ளனர்.

ஐந்து முறை புற்றுநோயால் பாதிக்கப்பட்டாலும் எப்போதும் தனது வாழ்வை இறுதி வரை வாழ வேண்டும் என்பதில் இவர் தெளிவாக இருந்தார். நோயில் இருந்து முற்றிலும் விடுபட்டவர் புதிய உடற்பயிற்சி சவால்களைச் செய்து வருகிறார்.

"என் கதையைய அறியாத ஒருவர் எனக்கு ஐந்து முறை கான்சர் என்று கேள்விப்பட்டால், நான் துரதிர்ஷ்டசாலி என்று நினைக்கலாம். ஆனால், நான் அதை வேறு வழியில் பார்க்கிறேன்.

நான் மிகவும் அதிர்ஷ்டசாலி. ஏனெனில் எனக்கு குடும்பஉறுப்பினர்களும்நண்பர்களும் கிடைத்துள்ளனர். நான் ஐந்து முறை சிகிச்சையிலிருந்து வெற்றிகரமாக வெளிவந்திருக்கிறேன். இப்போது நான் மற்றவர்களின் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த விரும்புகிறேன்" என்று நடாலி யேட்ஸ் போல்டன் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘நித்திலம் தொகுத்து வழங்கும்’

# சுகமான விடியல்

386

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## நீரிழிவு ஏற்படுவதைத் தடுக்க...

நீரிழிவு நோயானது, ஒரு பாரிய பிரச்சினையாக மாறி வருகிறது. மேலைத்தேய நாடுகளில் மட்டுமல்லாது, இலங்கை போன்ற வளர்முக நாடுகளிலும் இந்நோய் அதிகரித்துச் செல்வதை எம்மால் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. குறிப்பாக இலங்கையில், கொவிட் தொற்று காலப்பகுதியில், இளம் வயது நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நிலை ஏற்பட்டது. இது ஒரு அபாய அறிகுறியாகும். ஏனெனில், இளம் சமுதாயத்தினருக்கு இந்த இளம் வயதிலேயே நீரிழிவு ஏற்படுவது, அவர்களில் பல தாக்கங்களை ஏற்படுத்தும். ஆகவே, நாம் அனைவரும் ஒன்றிணைந்து நீரிழிவு வராமல் தடுப்பது எப்படி என்று கலந்துரையாடுவது காலத்தின் கட்டாயமாகும்.

நீரிழிவு நோய் ஏன் இவ்வாறு அதிகரித்துச் செல்கிறது எனும் வினா எழுந்தால், அதற்கு மிக முக்கியமான காரணம், எமது வாழ்க்கை நடைமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்களே ஆகும். குறிப்பாக, இந்த அவசர காலத்தில் எமது உணவு முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களே பிரதான காரணமாகும். துரித உணவுகள், மேலைத்தேய உணவுகள் போன்றவற்றில் நாட்டம் அதிகரித்துச் செல்வது, உடல் அப்பியாசமற்ற வாழ்க்கை முறை, மன அழுத்தம் போன்றவையும் நீரிழிவு ஏற்படுவதற்கான காரணங்களாக காணப்படுகின்றன. ஆகவே, எங்களால் முடிந்த வரை இளம்வயது முதலே ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பது மிக அவசியமாகும். எமது பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய ஆரோக்கியமான உணவுகள் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய அவசர உலகத்திலே, உடற்பயிற்சி செய்வதற்கு நேரமில்லை என்று தான் நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால், முடிந்த வரை உடற்பயிற்சி செய்வது அவசியம். அதோடு மன அழுத்தமற்ற வாழ்க்கை முறைக்கு நாம் பழக வேண்டும். இன்றைய உலகத்தில் பலர், நட்புகளின்றி மனக் கவலையான நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறான நிலைமை நீரிழிவு நோய் போன்ற பல தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான காரணமாக அமைகிறது.

ஒருவருக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்பதை மிக இலகுவாக கண்டறியலாம். அதாவது, இரத்தத்தில் காணப்படும் குளுக்கோஸின் அளவை பரிசோதித்து பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். நீரிழிவு நோய் ஒருவருக்கு இருக்கும் போது, அவருக்கு அதிகரித்த தாகம், அதிக பசி, அடிக்கடி சிறுநீர் கழித்தல் மற்றும் உடற்பருமன் குறைவடைதல் போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். ஆனால், எந்த ஒரு அறிகுறியும் இல்லாமலும் கூட ஒருவருக்கு நீரிழிவு நோய் ஏற்படலாம். ஆகவே, 35 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தங்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறதா என பரிசோதிப்பது மிக அவசியமாகும்.

அதேபோல், 35 வயதிற்கு குறைந்தவர்கள் உடற்பருமனாக இருந்தால், அவர்கள் குடும்பத்தில் யாருக்கேனும் நீரிழிவு நோய் இருக்குமானால், அவர்களுக்கு நீரிழிவு நோய்க்கான அறிகுறிகள் காணப்பட்டால், அவர்கள் நிச்சயமாக இந்த பரிசோதனையை மேற்கொள்வது அவசியமாகும். ஏனெனில், உலகளாவிய ரீதியில் கண் குருடாதல், சிறுநீரக பாதிப்பு, நரம்புத் தொகுதி பாதிப்பு, இதய நோய்கள், பாரிசவாதம் போன்றவை ஏற்படுவதற்கும் மிக முக்கியமான காரணம் இந்த நீரிழிவு நோய் ஆகும். நீரிழிவு என்பது நின்று கொல்லும் ஒரு வியாதி ஆகும்.

ஆகவே, வரும்முன் காப்பது தான் மிக முக்கியம். இன்றைய காலகட்டத்தில், எத்தனையோ சிறுவர்களுக்கு கூட நீரிழிவு நோய் காணப்படுகிறது. முன்னைய காலத்தில் சிறுவர்களுக்கு ஏற்படுவது Type 1 Diabetes எனப்படும் இன்சுலினில் ஏற்படும் பிரச்சினை ஆகும். ஆனால், இன்று பல சிறுவர்களுக்கு Type 2 Diabetes ஏற்பட்டுள்ளது.

ஆகவே, நாம் மக்களை அறிவுறுத்த வேண்டும். எமது, இளம் சமுதாயத்தினர், பாடசாலை மக்களை அறிவூட்ட வேண்டும். ஏனெனில், சிறுவர்களுக்கு நீரிழிவு ஏற்பட்டால் அதனால் ஏற்படும் நீண்டகால பாதிப்புகள் அதிகமாகும். எனவே, நீரிழிவு பற்றிய விழிப்புணர்வு எம் மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டும். இந்த நீரிழிவு நோய், உடலின் அனைத்து அங்கங்களையும் பாதிக்கக்கூடிய ஒரு நோயாகும். நீரிழிவு நோய் ஒருவருக்கு இருப்பது கண்டறியப்பட்டால், அவர் ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும். அதாவது, சீனி சேர்க்கப்பட்ட உணவுகள், மாச்சத்து உணவுகள் என்பவற்றை முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அதேபோல், நீரிழிவு உள்ள ஒருவருக்கு உயர்குருதி அமுக்கம், கொலஸ்ரோல் போன்ற நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது. எனவே, இது தொடர்பாகவும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். அதாவது, கொழுப்புச்சத்து அதிகமான உணவுகள் உண்பதை தவிர்க்க வேண்டும். அதோடு, அவர்கள் ஒவ்வொரு நாளும் தமக்கு இயன்றவரை உடற்பயிற்சி செய்வது அவசியமாகும். சாதாரண உடற்பருமன் உடைய ஒருவர், வாரத்திற்கு 5 தடவைகளாவது உடற்பயிற்சி செய்ய வேண்டும். Aerobic exercise என்று சொல்லப்படும் வேகநடை, ஓடுதல் போன்ற அப்பியாசங்களைச் செய்ய வேண்டும். அதேபோல உடற்பருமன் கூடிய ஒருவர் ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலமாவது இந்த Aerobic exercise ஐ செய்வது அவசியமாகும். தசைகளுக்கு வலுவூட்டும் உடற்பயிற்சிகளையும் வாரத்திற்கு இரு தடவைகள் கட்டாயமாக செய்ய வேண்டும். முக்கியமாக, நீரிழிவு நோயாளிகள் மன அழுத்தங்களிலிருந்து விடுபட வேண்டும். அதேபோல், போதியளவு தூக்கம் அவசியம்.

நீரிழிவு நோயாளராக இணங்காணப்பட்ட ஒருவர் நிச்சயமாக வைத்திய ஆலோசனையை தொடர்ந்து பெறுவது அவசியமாகும். தொடர்ச்சியாக சிகிச்சை நிலையங்களுக்குச் சென்று, வைத்திய ஆலோசனைப்படி குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை, அவர்கள் குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவை பரிசோதித்து பார்ப்பது அவசியமாகும். அதேபோல், குருதியிலுள்ள கொலஸ்ரோலின் அளவு, சிறுநீரக தொழிற்பாடு போன்ற பல பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டி இருக்கும். எமது மக்கள் மத்தியில் இந்த நீரிழிவு நோய் குறித்து பல தவறான அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக, நீரிழிவு நோய்க்கான மருந்துகள் எடுப்பதால் பல பாதிப்புகள் ஏற்படும் என்று நினைக்கிறார்கள். Metformin என்ற மருந்தை எடுப்பதால் சிறுநீரகம் பாதிக்கப்படும் என்று கூறுகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் முக்கியமாக நான் கூற வேண்டிய விடயம், உண்மையில் இந்த Metformin என்ற மருந்து சிறுநீரக செயலிழப்பை தடுக்கக் கூடிய மருந்தாகும். அதற்காக தான் வைத்தியர்கள், குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை சிறுநீரக பரிசோதனைகளைச் செய்யுமாறு பரிந்துரைக்கின்றனர். சிறுநீரகம் செயலிழந்த ஒருவருக்கு தான் வைத்திய ஆலோசனைப்படி இந்த மருந்துகளை மாற்ற அல்லது குறைக்க வேண்டி இருக்கும். ஆகவே, உங்களுக்கு இது தொடர்பாக சந்தேகங்கள் காணப்பட்டால் நிச்சயமாக வைத்திய ஆலோசனையை பெறுவது அவசியமாகும்.

வருடந்தோறும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நீரிழிவு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, குடும்பமாக இணைந்து விழிப்புணர்வுடன் செயற்பட்டால், நீரிழிவு என்ற கொடிய அரக்கனிடம் இருந்து எமது சமுதாயத்தை மீட்கக்கூடியதாக இருக்கும். குறிப்பாக இலங்கையில் 1980களில் 3% ஆக இருந்த நீரிழிவு, அண்மையில் கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 30% ஆக அதிகரித்துள்ளது. யாழ். மாவட்டத்தில், நீரிழிவு நோயின் தாக்கம் ஏறக்குறைய 15% ஆக இருக்கின்றது. இது ஒரு அபாய எச்சரிக்கை. இந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு நீரிழிவு நோயினை வென்று வாழ்வோம்.

Dr. M. அரவிந்தன்,
அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு மருத்துவ நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

### உடல் நிறையைக் குறைத்துக்கொள்ள ஒரு வாய்ப்பு

ஆரோக்கியமாகவும் வேகமாகவும் உடல் நிறையைக் குறைத்துக்கொள்ள நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது சம்பந்தமான தொடர் வழிகாட்டல் காணொளிகள் நித்திலம் கலையகத்தினால் Nithilam tv YouTube channel இல் தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. இதனைப் பார்த்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நித்திலம் கலையகம்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சே நவால்னி திடீர் மரணம்

(மொஸ்கோ)

ரஷ்ய எதிர்கட்சித் தலைவர் அலெக்சே நவால்னி சிறையில் உயிரிழந்துள்ளார்.

ஆர்ட்டிக்கில் உள்ள சிறைச்சாலையில் அவர் உயிரிழந்துள்ளார் என ரஷ்ய சிறைச்சாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நவால்னி திடீர் என உடல்நலம் பாதிக்கப்பட்டார். சிறிது நேரத்தில் சுய நினைவிழந்ததாக ரஷ்ய சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவரை காப்பாற்றுவதற்கான முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. அவர் உயிரிழந்துவிட்டார் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி)

# பெயின்ற் தொழிற்சாலையில் தீ விபத்து-11 பேர் உயிரிழப்பு

## டில்லியில் துயரம்



(டில்லி)

டில்லியில் பெயின்ற் தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 11 பேர் உடல் கருகி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

டில்லியின் அலிபுர் தயால்பூர் பகுதியில் உள்ள பெயின்ற் தொழிற்சாலையொன்றிலேயே நேற்று முன்தினம் மாலை குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

குறித்த தொழிற்சாலையில் இருந்த இரசாயனப் பொருட்கள் வெடித்து சிதறிய தோடு அருகில் உள்ள கடைகளுக்கும் வேகமாக தீ பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இரசாயன பொருட்கள் வெடித்ததிலும் கட்டடம் இடிந்து விழுந்ததிலும் 11 தொழிலாளர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கி தீயில் கருகி உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி)

# மருந்திற்காக அழிக்கப்படும் ஆபிரிக்க கழுதைகள்

(பீஜிங்)

சீனாவில், கழுதைத் தோலில் உள்ள ஜெலட்டின் மூலப்பொருளால் தயாரிக்கப்படும் ஒரு அரிய வகை பண்டைய மருந்திற்கான தேவை அதிகரித்துள்ளதால் ஆபிரிக்காவின் பல நாடுகளில் கழுதைகள் களவாடப்படுவது அதிகரித்துள்ளது.

உடல் ஆரோக்கியத்தை அதிகரிக்கவும் இளமையை நீடிக்கவும் தூக்க மின்மையை போக்கவும் குழந்தை பாக்கியத்தை அதிகரிக்கவும் உதவும் "எஜியாவோ" எனும் மருந்திற்காக கழுதைகளின் தோல்களை வேக வைத்து அதில் பல பொருட்களைச் சேர்த்து பொடியாகவும் மாத்திரையாகவும் மருந்தாகவும் சீனாவில் விற்கப்படுகிறது.

ஆபிரிக்க நாடுகளில் குடிநீர், உணவு, பெரும் சுமை தூக்குவது உள்ளிட்ட பல வேலைகளுக்கு கழுதைகள் பயன்படுத்தப்படுகின்றன.

உலகின் 53 மில்லியன் கழுதைகளில் 2/3 பங்கு ஆபிரிக்க நாடுகளில் உள்ளன. கழுதைத் தோலுக்கு அதிக விலை கிடைப்பதால், அவற்றை பலர் களவாடுவது அதிகரித்துள்ளது.

1990 களில் சீனாவில் 11 மில்லியனாக இருந்த கழுதைகளின் எண்ணிக்கை 2021 காலகட்டத்தில் 2 மில்லியனுக்கும் கீழே குறைந்து விட்டது. இதையடுத்து, சீன நிறுவனங்கள், தங்கள் தோல் தேவைக்கு ஆபிரிக்க நாடுகளை சார்ந்துள்ளன.

2013 இல் $3.2 பில்லியனாக இருந்த எஜியாவோவிற்கான சந்தை மதிப்பு, 2020 இல் $7.8 பில்லியனாக உயர்ந்துள்ளது. இது மேலும் உயர்ந்தால், கழுதை இனத்திற்கு ஆபத்து ஏற்படலாம் என்பதால், கழுதை தோல் ஏற்றுமதிக்கு முழுமையான தடை விதிக்க வேண்டும் என ஆபிரிக்க நாடுகளில் விலங்கின ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இன்று ஒரு தகவல் 40



தென்கச்சி கோசுவாமிநாதன்

# ராகங்கள்

பாடப் பாட ராகம் என்று ஒரு பழமொழி சொல்லுவாங்க.

பாடப்பாட வேகம் என்று கூட ஒரு புதுமொழி சொல்லலாம். அதாவது ஒருத்தர் பாடப்பாட இன்னொருத்தருக்கு ஓடவேண்டும் என்கின்ற வேகம் அதிகமாகி கொண்டே இருக்கும்.

அதுதான் பாடப்பாட வேகம். சங்கீதத்தில் சங்கதிகள் உண்டு. சங்கீததை பற்றிய சங்கதிகளும் நிறைய உண்டு.

சரிகமபதநி என்னும் ஏழு ஸ்வரத்திலே எத்தனையோ ராகங்கள்.

எந்த ராகத்தை எப்போது பாட வேண்டும். எந்த பாட்டை எந்த ராகத்தில பாட வேண்டும் என்று எல்லாம் சில முறைகளை வகுத்து வைத்து இருக்கிறார்கள்.

இடத்திற்கு தகுந்த ராகம் உண்டு. செய்யுளிற்கு தகுந்த ராகம் உண்டு. குணத்திற்கு தகுந்த ராகம் உண்டு. காலத்திற்கு தகுந்த ராகம் உண்டு.

இடத்திற்கு தகுந்த ராகம் என்று சொன்னேன் அல்லவா. அது ஐந்திணை ராகம். குறிஞ்சி,பாலை,முல்லை, நெய்தல், மருதம் இப்படி ஐந்து வகை நிலங்கள் உண்டல்லவா?அந்த ஐவகை நிலங்களுக்கும் பொருத்தமாக ராகங்கள் உள்ளன.

குறிஞ்சி-பாலை-சாதாரி-செவ்வளி-மருதம்இப்படி.

செய்யுளுக்கு தகுந்த ராகம் என்று சொன்னேன் அல்லவா. அது எப்படி தெரியுமா? வெண்பாவுக்கு- சங்கராபரணம், ஆசிரியப்பாவுக்கு-தோடி, கலிப்பாவுக்கு பந்துவராளி கலித்துறைக்கு -பைரவி, தாழிசைக்கு-தோடி, விருத்தப்பாவுக்கு-கல்யாணி- காம்போதி-மத்தியமாவதி, உலாச்செய்யுள்களுக்கு-சௌராஸ்டிரம், பிள்ளைத்தமிழுக்கு கேதார கௌளம், பரணிக்கு -கண்டாரவம்.

குணத்திற்கு தகுந்த ராகம் என்று சொன்னேன் அல்லவா?

இரக்கத்திற்கு –நீலாம்பரி, புன்னாகவராளி,ஆகரி, கண்டாரவம் , பியாகடம்.

துக்கத்திற்கு இதே இரக்க ராகங்கள் அதோட வராளியையும் சேர்த்துக் கொள்ளலாம்.

மகிழ்ச்சிக்கு- காம்போதி ,சாவேரி, தன்யாஸி.

யுத்தராகம்–நாட்டை.

காலத்திற்குத் தகுந்த ராகம் என்று சொன்னேன் அல்லவா.

வசந்த கால ராகங்கள் –வசந்தா, காம்போதி,அசாவேரி, தன்யாசி.

மாலை வேளை ராகம்- கல்யாணி,காபி, கன்னடம், காம்போதி.

யாம வேளை ராகம்–ஆகரி.

விடியற் காலை ராகம் –இந்தோளம்,நாட்டை, பூபாளம்.

இவை எல்லாம் நீங்கலாக மற்ற ராகங்கள் எல்லா காலத்திற்கும் பொருந்தும்.

இன்னொரு விடயம் தெரியுமா? ராகங்களிலே ஆன் ராகம், பெண் ராகம் என்று எல்லாம் உண்டு.

ஒருத்தனுக்கு ஒருத்தி என்னும் கட்டுப்பாடு எல்லாம் அவற்றுக்கு கிடையாது.

இப்போது உதாரணத்திற்கு பைரவியை எடுத்து கொள்ளுங்கள். இது ஆண் ராகம்.

தேவக்ரியை,மேகவிரஞ்சி, குறிஞ்சி இது எல்லாம் பெண் ராகங்கள்.

இவை எல்லாம் பைரவியின் மனைவிகள். இந்த ராகங்களுக்கு அதி தேவதை ஈசன்.

சீராகம் என்பது ஆண்ராகம் . இந்தோளம்,பல்லதி, சாவேரி இது எல்லாம் அதோட மனைவிகள். இதுகளுக்கு அதி தேவதை சரஸ்வதி அப்படி நிறைய தம்பதிகள் இருக்கிறார்கள்.

இத எல்லாம் எதுக்கு சொல்ல ஆரம்பித்தேன் என்றால் இன்றைக்கு தகவலிலே ஒரு ராகத்தை பாடிக் காட்டலாம் என்று ஆசை. என்னத்திற்கு எனக்கும் ரிஸ்க் உங்களுக்கும் ரிஸ்க் என்று நினைத்து ராகத்தை பற்றிய தகவலை மட்டும் சொன்னேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களின் சிறைத்தண்டனையை ரத்து செய்யக்கோரி தொடர் போராட்டம்

## கச்சதீவு திருவிழாவையும் புறக்கணிக்க தமிழக மீனவர்கள் முடிவு

(மன்னார்)

**எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கைது செய்யப்பட்ட மூன்று தமிழக மீனவர்களுக்கு சிறைத்தண்டனை விதித்து இலங்கை நீதிமன்றம் தீர்ப்பளித்ததை கண்டித்தும் நீதிமன்ற தீர்ப்பை உடனடியாக ரத்து செய்ய வலியுறுத்தியும் ராமேஸ்வர மீனவர்கள் கச்சதீவு திருவிழாவை புறக்கணிப்பதுடன் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் தீர்மானம் நிறைவேற்றினர்.**



ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த மூன்றாம் திகதி மீன்பிடிக்க சென்று போது எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இரண்டு படகுகளையும் அதிலிருந்து 23 மீனவர்களையும்இலங்கைகடற்படையினர் கைது செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.

மீனவர்களின் வழக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது வழக்கை விசாரித்த நீதிபதி 23 மீனவர்களில் 20 மீனவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டதுடன் இரண்டு மீன்பிடி விசைப் படகு ஓட்டுநர்களான பெக்கர் மற்றும் ராபர்ட் ஆகிய இருவருக்கும் ஆறு மாத காலம் சிறந்த தண்டனையும் அதேபோல் இலங்கை கடற்படையால் 2019 ஆண்டு சிறைப் பிடிக்கப்பட்டு இலங்கை நீதிமன்றத்தால் நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்ட மீனவர் மெல்வின் மீண்டும் எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதால் அவருக்கு ஓராண்டு சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

இலங்கை நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பு ராமேஸ்வரம் மீனவர்கள் மத்தியில் மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் இந்த தீர்ப்பை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் எனவும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ராபர்ட், பெக்கர், மெல்வின் ஆகிய மூன்று மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி இன்று ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் அனைத்து விசைப்படகு மீனவ சங்கம் சார்பில் அவசர ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த கூட்டத்தில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட மூன்று மீனவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டு கண்ணீருடன் தங்களது சிறையில் உள்ள தங்கள் உறவினர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி கோரிக்கை வைத்தனர்.

பின்னர் கூட்டத்தின் முடிவில் வரும் 23,24 ஆகிய திகதிகளில் கச்சதீவில் நடைபெற உள்ள புனித அந்தோனியார் கோவில் திருவிழாவில் கலந்து கொள்ளாமல் தமிழக மீனவர்கள் புறக்கணிக்கப் போவதாகவும் விசைப்படகு மீனவர்கள் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் இன்று மீன்பிடி விசைப் படகுகளில் கறுப்பு கொடியேற்றி தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்த போவதாகவும் தீர்மானித்தனர்.

மேலும் தங்களது கண்டனத்தை பதிவு செய்யும் விதமாக ராமேஸ்வரம் மீன்பிடி அனுமதி சீட்டு வழங்கும் அலுவலகம் முன்பு மீனவர்கள் சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (நி-285)

# பாடசாலை மாணவர்களுக்கான பேருந்து சேவைகள் நடத்தப்பட வேண்டும்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை நேரங்களில் பேருந்துகள் பயணிக்காததன் காரணமாக மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

மாங்குளம் மகா வித்தியாலயத்திற்கு திருமுறிகண்டி, பனிக்கன்குளம், கிழவன்குளம், அம்பகாமம் ஆகிய பல பகுதிகளில் இருந்து மாணவர்கள் வருகை தருகின்றனர்.

இதேபோன்று தேவிபுரம் கிராமத்தில் இருந்து உடையார்கட்டு மகா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்கின்றனர்.

அத்துடன் தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான் கிராமத்தில் இருந்து குமுழமுனை மகா வித்தியாலயத்திற்கு மாணவர்கள் வருகை தருகின்றனர். இவர்கள் பாடசாலை செல்வதில் பெரும் நெருக்கடியினை எதிர்கொள்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாணவர்களுக்கான பேருந்து சேவைகள் நடத்த வேண்டும் என்ற தீர்மானங்கள் பல தடவைகள் எடுக்கப்பட்டும் இலங்கை போக்குவரத்து சபையோ, தனியார் போக்குவரத்து சங்கமோ மாணவர்கள் பாடசாலைக்கு சென்று வரக் கூடிய வகையில் இதுவரை பேருந்து சேவைகளை பல கிராமங்களுக்கு நடத்தவில்லை என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (நி-350)

# தேவிபுரம் கிராமத்திற்கு தபாலகம் வேண்டும்

## கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு தேவிபுரம் கிராமத்தில் தபாலகம் இயங்காததன் காரணமாக இக்கிராமத்தில் வாழ்கின்ற 1,500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

15 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள புதுக்குடியிருப்பு நகரத்திற்கு சென்றே இக்கிராம மக்கள் தமது தபாலக பணிகளை நிறைவேற்றுகின்றனர். தேவிபுரத்தில் தபாலகத்தினை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கிராம மக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை நிறைவேற்றப்படாமலே உள்ளது.

இந்நிலையில் தபாலக சேவையுடன் தொடர்புடைய உயரதிகாரிகள் தேவிபுரத்தில் தபாலகம் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-350)

# பெரிய சாளம்மன் கிராமத்தில் குடிநீர் பெறுவதில் நெருக்கடி

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பெரியசாளம்பன் கிராம மக்கள் குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

115 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் பலர் சிறுநீரக பாதிப்பிற்கு உள்ளாகிய நிலையில் உள்ளனர்.

தட்டையர்மலை கிராம அலுவலர் பிரிவில் பெரியசாளம்பன் கிராமம் உள்ளது. தட்டையர்மலை கிராமத்திற்கு முத்தையன்கட்டு குளநீர் வருகின்றது. ஆனால் பெரியசாளம்பன் கிராமத்திற்கு குளத்து நீர் வருவதில்லை.

கடும் வறட்சியான காலங்களில் பெரியசாளம்பன் கிராமத்தின் கிணறுகள் அனைத்தும் முற்றாக வற்றிவிடும். இந்நிலையில் கடுமையான குடிநீர் நெருக்கடியினை இக்கிராம மக்கள் எதிர்கொள்ள நேரிடுகிறது.

கிராமத்திற்கு வருகை தரும் அரசியல்வாதிகளிடமும் அதிகாரிகளிடமும் கிராம மக்களுக்கு குடிநீர் பெற்றுக் கொடுப்பதற்கான வசதிகளை செய்து தருமாறு பல தடவைகள் கோரிக்கைகள் விடுத்தும் அவை நிறைவேற்றப்படவில்லை.

ஏனைய கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் போன்று பெரியசாளம்பன் கிராமத்திலும் உருவாக்கப்பட வேண்டும் என்பதே கிராம மக்களின் வேண்டுகையாக உள்ளது. (நி-350)

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்த இந்திய உயர்ஸ்தானிகர்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இந்திய உயர்ஸ்தானிகர் தலைமையிலான குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த 100 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளனர்.

நேற்று முற்பகல் 10 மணிக்கு மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்த உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 40 பயனாளிகளுக்கும் கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட தலா 20 பயனாளிகளுக்கும் என 100 பயனாளிகளுக்குமான இலங்கை இந்திய நட்புறவின் கீழ் உலருணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (நி-315-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
~ காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கர்ணனுக்கு - சல்லியன்
## அருச்சுனனுக்கு - கண்ணன்

குருசேத்திரத்தில் மகாபாரதப் போர் நடக்கிறது. கௌரவர், பாண்டவர் ஆய இரு தரப்பினரும் மிகவும் பலம் வாய்ந்தவர்கள்.

போர் வெற்றி யார் பக்கம் என்று தீர்மானிக்க முடியாத அளவில் இரு தரப்பும் ஒருவர்க்கொருவர் சளைத்தவர்கள் அல்ல.

அப்படியானால் வெற்றியைத் தீர்மானித்தது எது? என்ற கேள்வி எழும்.

இங்குதான் களத்தில் போர்த்தளபதிகளுக்குத் தேர்ச் சாரதிகளாக இருந்தவர்கள் பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டும்.

ஆம், கௌரவர் தரப்பில் கர்ணனுக்குத் தேர்ச் சாரதியாக சல்லியன் அமைகிறான்.

பாண்டவர் தரப்பில் அருச்சுனனுக்கு கண்ண பரமாத்மா சாரதியாக அமைகிறார்.

போர் தொடங்குகிறது. கர்ணன் நாகாஸ்திரம் எனும் மிகச் சக்தி வாய்ந்த கணையை அருச்சுனன் மீது ஏவுகிறான்.

நிலைமையை உணர்ந்த கண்ண பரமாத்மா தேரை அமிழ்த்தி நாகாஸ்திரத்தில் இருந்து அருச்சுனனைக் காப்பாற்றுகிறார்.

அதோ! கர்ணனின் தேர் மண்ணில் புதைகிறது.

புதைந்த தேரை மீட்டெடுக்க சல்லியன் மறுக்கிறான்.

மத்திர நாட்டின் மன்னனாகிய யான் புதைந்த தேரை தூக்குவதா! இல்லை என அடியோடு மறுக்க; கர்ணன் தானே கீழ் இறங்கி புதைந்த தேரை மீட்டெடுக்க முயற்சிக்கிறான்.

அத்தருணத்தில் கர்ணனின் உடலை கணைகள் பதம் பார்க்கின்றன.

இங்குதான் அருச்சுனனுக்கு வாய்த்த தேர்ச் சாரதி அருச்சுனனைக் காப்பாற்ற; கர்ணனுக்கு வாய்த்த சல்லியன் கர்ணனை களப்பலியாக்குகிறான்.

ஆக, மகாபாரதப் போரின் வெற்றியைத் தீர்மானித்தவர்கள் தேர்ச்சாரதிகள் என்பது தான் உண்மை.

எனினும் அதுபற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்காத காரணத்தால், கௌரவர்களின் தோல்வியில் சல்லியனின் வகிபாகம் பற்றி யாரும் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை.

இதை நாம் கூறும்போது, அது சரி இப்போது இக்கதை எதற்கு என்று நீங்கள் கேட்கலாம். எல்லாம் காரணத்தோடுதான்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி இப்போது களத்தில் நிற்கிறது. இங்கு பாண்டவர்களும் கௌரவர்களும் ஒரே கட்சிக்குள்தான் இருக்கின்றனர்.

அதாவது ஒரே வீட்டுக்குள் என்று கூறிக் கொள்ளலாம்.

சல்லியன்போல வெளியிலிருந்தும் சிலர் களத்தை கலகலப்பாக்க உள்நுழைந்துள்ளனர்.

நல்லது. மகாபாரதத்தில் போருக்குப் பின்புதான் வெற்றி.

ஆனால் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் வெற்றிக்குப் பின்புதான் போர்.

சுருங்கக்கூறினால், வெற்றியால் ஏற்பட்ட தாக்கத்தின் விளைவு என்றும் கூறிக்கொள்ளலாம்.

இதில் வேடிக்கை என்னவெனில், மகாபாரதத்தில் அதுகாறும் அடங்கியிருந்த திருதராட்டிரன் எங்ஙனம் போர் வெற்றியை அறியத் துடித்தானோ! அதுபோல தமிழரசுக் கட்சியிலும் முடிவை அறிய திருதராட்டிரர்கள் துடிக்கிறார்கள்.

பரவாயில்லை. களத்தில் நிற்பவர்கள் தேர்ச்சாரதிகளைச் சற்றுக் கவனித்துக் கொள்வது நல்லது.

# கட்புலனற்ற வாக்காளர்களும் வாக்களிக்க விசேட வசதி
## தேர்தல்கள் ஆணைக்குழு

கட்புலனற்றோர் வாக்களிக்க விசேட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேல்தல்களின் போது வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் உதவியுடனேயே தற்போது அவர்கள் வாக்களித்து வருவதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் R.M.A.L. ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் கீழ் Braille முறையில் அச்சிடப்பட்ட கட்சிகளின் பெயர்கள் மற்றும் வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய காகிதம் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான விசேட மாதிரி வேலைத்திட்டம் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பார்வையற்றோர் மற்றும் பார்வையற்ற சமூகத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு இப்புதிய வேலைத்திட்டம் தொடர்பில் அறிவிக்கப்பட்டு நடைமுறை சோதனையும் நடத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் தேர்தலில் கட்புலனற்றோர், தனித்து வாக்களிக்கும் உரிமையை அனுபவிக்க முடியுமென தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் R.M.A.L.ரத்நாயக்க தெரிவித்தார். (ம-7)

# பொலிஸ் அதிகாரத்தினை நீக்க அனுமதிக்க முடியாது
## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரத்தினை இல்லாமல் செய்வதற்கு அனுமதிக்க முடியாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரத்தினை மீளப்பெறுவதற்காக உதய கம்பன்பிலவினால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு திருத்தத்திற்கான தனிநபர் பிரேரணை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில், "அரசியல் ரீதியான நோக்கங்களுக்காக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்பன்பிலவினால் இந்த தனிநபர் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. இது பாராளுமன்ற விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் நிறையப் படிமுறைகளை தாண்டி வரவேண்டியிருக்கின்றது. தற்போதைக்கு அது சாத்தியமில்லை என்றே கருதுகின்றேன்.

ஒருவேளை, இந்த முயற்சி தொடர்ந்தும் முன்னகருமாக இருந்தால், நாம் உருவாக்கி வைத்துள்ள தேசிய நல்லிணக்கத்தினை பயன்படுத்தி, அதனை தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்" என்று தெரிவித்தார். (ம-7)

# பரமபிதா காட்டிய பாதை
## நம் இதயங்களை இறை அருளுக்கும் அடுத்தவரின் தேவைகளுக்கும் திறப்போம்

இயேசுவின் பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பு எனும் மீட்பு மறையுண்மைகளைக் கொண்டாடுவற்கு நாம் தவக்காலத்தின் முதல் ஞாயிறில் கால்பதிக்கின்றோம். ஒறுத்தல், செபம் மற்றும் மனமாற்றத்தை உள்ளடக்கி இத்தவக்காலத்தில் நாம் எம்மை நன்கு தயாரிக்க வேண்டும். இயேசு பாலைவனத்தில் சாத்தானின் சோதனைக்கு உட்பட்டதை இன்றைய பைபிளின் மாற்கு நற்செய்தி 1:12-15பகுதி விளக்குகின்றது.

இயேசு சாத்தானிடம் சரணடைய வேண்டும் என்பது சாத்தனின் விருப்பம். முப்பது ஆண்டுகள் மறைந்த வாழ்வு, மூன்று ஆண்டுகள் கடினமான பணி, இறுதி மூன்று நாட்கள் கொடிய வேதனை, இறுதி மூன்று மணி நேரங்கள் சிலுவையின் கொடூரச் சித்திரவதை இவை எதுவும் இயேசுவிற்குத் தேவையில்லை. ஒரு நொடிப்பொழுது போதும். எருசலேம் கோவில் சாகசம் ஒன்று போதும். உலகம் இயேசுவின் காலடியில் கிடக்கும் என்ற கனவுகளை அடுக்கிவைத்து சாத்தான் விளையாடியது. போதும் உன்துட்டத்தனம் என்று இயேசு சாத்தானை விரட்டியடிக்கிறார். இயேசு அதைச்செய்யத் திட்டவட்டமாக மறுத்தார். இயேசு இறைவனிடமே சரணடைகின்றார். இறை சித்தத்திற்குத் தன்னை அர்ப்பணிக்கின்றார்.

சோதனை எல்லோருடைய வாழ்விலும் நிகழ்கிறது. நன்மை செய்யவேண்டும் என்ற எண்ணத்தோடு, கடவுளின் இறையாட்சி இந்த மண்ணில் வர உழைக்கிற ஒவ்வொருவருடைய வாழ்விலும் சோதனைகள் நிச்சயமாக இருக்கும் என்பதை இந்த நிகழ்ச்சி தெளிவாகக் காட்டுகிறது. அத்தகைய சோதனைகளைக் கண்டு பயப்படாமல், நாம் துணிவோடு, இறைவனின் துணையை நாடினால் நம்மால் சோதனைகளை வெல்லமுடியும் என்பது இயேசு கற்றுத்தருகிற பாடம்.

இயேசு உடலால், உள்ளத்தால் சோர்ந்திருந்தாலும் அவர் துணிவோடு இருக்கிறார். சாத்தான் அவரைச் சோதிக்கிறபோது இறைவார்த்தையின் வழியாக இறைவனின் வல்லமை அவரிடமிருந்து வெளிப்படுகிறது. இறைவார்த்தையின் இறைப்பிரசன்னம் அவரை வழிநடத்துகிறது. இறுதியில் சோதனைகளை எதிர்த்து வெற்றிபெறுகிறார். இச்சோதனைகளை வெல்ல இயேசு பைபிளை மேற்கோள்காட்டினார். அந்த இறைவார்த்தைகளைச் செயற்பாடாக்கினார். இவ்வாறு, இறைவன்மீது அவருக்குள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தினார். நாமும் இறைவார்த்தையைக் கொண்டும் இறைநம்பிக்கையைக் கொண்டும் நம் சோதனைகளை வெல்வோம். நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு வாழ்வை அணுகும்போது, நமக்கு வருகிற சவால்கள் [illegible] வலிமை [illegible] அஞ்சாமல் துணிவோடு இறைப்பிரசன்னத்தை நாடி அவற்றை எதிர்கொண்டால் நாம் வெற்றி பெறுவோம்.

நாம் ஏன் இறைவனிடம் திரும்பிச் செல்லவேண்டும்? ஏனெனில் நமக்குள், நாம் வாழும் உலகில், நமது சமுதாயத்தில், அனைத்தும் நலமாக இல்லாததால், மாற்றங்களைத் தேடி, மனமாற்றங்களைத் தேடி நாம் இறைவனிடம் திரும்ப வேண்டும். பண்பற்றவகையில் உற்பத்தியைப் பெருக்குவது ஒன்றே முக்கியம் என்பதை முன்னிறுத்தும் இவ்வுலகில், கடவுள் ஒதுக்கப்படுகிறார்.

மீண்டும் அவரை வாழ்வின் மையத்திற்குக் கொண்டு வர தவக்காலம் எமக்கு உதவுகிறது. கண்மூடித்தனமாக நுகர்வுக் கலாசாரத்தைப் பின்பற்றி, சுயதேவைகளைப் பெருக்கிக் கொள்ளுதல், சுதந்திரம் என்று மாற்றானைக் கையகப்படுத்தல். காமவெறிகளை கண்டவனோடும் பகிர்ந்து கொள்ளல், குறுக்கு வழிகளில் பலன் தேடுதல், சுய விளம்பரத்திற்காக எதையும் செய்தல், உலகின் தீயசத்திகளோடு சமரசம் செய்தல் என்று நம்மைக் கவர்ந்திழுக்கும் சோத னைகளுக்கு நம் பதில் என்ன? இயேசுவிடமிருந்து ஏதாவது பாடங்களை நாம் கற்றுக் கொள்ளமுடியுமா? கற்றுக்கொண்டதைச் செயலாக்க விருப்பமா? இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல, தவக்காலம் நல்லதொரு நேரம்.

செபம், உண்ணா நோன்பு, தர்மம் என்ற மூன்று செயற்பாடுகள் தவக்காலத்தின் முக்கிய முயற்சிகள். இதனை இயேசு நன்றாக செய்துகாட்டினார். இயேசுவின் பாதச்சுவடுகளில் இடம்பெறும் இந்த ஆன்மிகப் புதுப்பித்தல் பயணமானது இன்று நம்மிடையே காணப்படும் ஆன்மிக மற்றும் பொருளாதார வறுமை வளர்ந்து வருவதை உணரவும் அதற்கு பதிலுரைக்கவும் நமக்கு அழைப்புவிடுக்கிறது. கடவுளின்றிச் செயற்படமுடியும் என்ற எண்ணமுடைய கலாசாரத்தின், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் செபிக்கக் கற்றுத்தராத ஒரு கலாசாரத்தின், வன்முறைகளையும் ஏழ்மையையும் சமுதாய அழிவுகளையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் ஒரு கலாசாரத்தின், அழுத்தங்களை நாம் முற்றிலும் உணர்ந்தவர்களாக, அவைகளை எதிர்த்து நிற்கவேண்டும். தனியார்களாகவும் சமுதாயமாகவும் நற்செய்தியின் வார்த்தைகளுக்குச் செவிமடுக்கவும், நம் விசுவாசத்தின் மறையுண்மைகளை ஆழ்ந்து தியானிக்கவும் ஒறுத்தல் மற்றும் பிறரன்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்கவும், நம் இதயங்களை இறை அருளுக்கும் நம் அடுத்தவரின் தேவைகளுக்கும் முழுமையாகத் திறக்கவும், இந்த தவக்காலம் நமக்கு உதவட்டும்.

**ம.பிரான்சிஸ்க்,**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசிபலன்கள் 13.02.2024–13.03.2024



**துலாம் இராசி வாசகர்களே!**

**சித்திரை 3, 4 ஆம் பாதம்:** தைரிய, வீரிய, சகோதரகாரகனான செவ்வாய், அதிர்ஷ்டக்காரகனான சுக்கிரன் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு உங்கள் வெற்றியை நோக்கிய சிந்தனையே எப்பொழுதும் இருக்கும். நினைத்ததை அடையும் வரை அதற்குரிய முயற்சிகளை தொடர்ந்து கொண்டே இருப்பீர்கள். இந்த மாதம் குரு பகவானின் பார்வை உங்கள் இராசிக்கு உண்டாவதால் இதுவரையில் இருந்த சங்கடங்கள் எல்லாம் விலக ஆரம்பிக்கும். வேலைவாய்ப்பிற்காக முயற்சித்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும்.

அலுவலகத்தில் இருந்த பிரச்சினைகள் முடிவிற்கு வரும். சிலருக்கு எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு போன்றவை ஏற்படும். புதிய இடம் வாங்கும் முயற்சியும் தொழில் தொடங்கும் எண்ணமும் நிறைவேறும். திருமண வயதினருக்கு வரன் வந்து சேரும். சிலர் புதிய வீட்டில் குடியேறுவீர்கள். வெளிநாட்டு முயற்சிகள் உங்களுக்கு சாதகமாகும். வியாபாரத்தில் எதிரிகள் பின்வாங்கிச் செல்வார்கள். குடும்பத்தில் சுப காரியங்கள் நடந்தேறும். பெண்களுக்கு இந்த மாதம் யோகமான மாதம் என்றே சொல்ல வேண்டும். வாழ்க்கைத்துணையின் ஆதரவு அதிகரிக்கும். உடலில் இருந்த சங்கடங்கள் விலகும். எதிர்ப்புகள் நீங்கும். மாதத்தின் பிற்பகுதியில் விருப்பங்கள் நிறைவேறும். விவசாயிகளின் வாழ்க்கையில் திருப்புமுனை ஏற்படும். எதிர்பார்த்த வரவு உண்டாகும். மாணவர்களுக்கு மாதத்தின் பிற்பகுதியில் கல்வியின் மீது அக்கறை அதிகரிக்கும். பொதுத்தேர்வை எதிர்கொள்ளும் முயற்சியில் முழுமையாக ஈடுபடுவீர்கள்.

சந்திராஷ்டமம்: பெப்.17, 18

அதிர்ஷ்ட நாள்: பெப்.15, 24. மார்ச் 6,9

பரிகாரம்: ஆதிபராசக்தியை தினமும் வழிபட்டால் சங்கடம் தீரும்.

சுவாதி: யோகக்காரகனான ராகு, அதிர்ஷ்டக்காரகனான சுக்கிரனின் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு எந்த ஒரு செயலிலும் அதிகமான ஈடுபாடு இருக்கும். எதிர்பார்ப்பு என்பது உங்களுக்குள் எப்போதும் இருக்கும். அதை நோக்கியே உங்கள் முயற்சிகளும் இருக்கும். இந்த மாதம் உங்கள் நட்சத்திரநாதன் ஆறாம் இடத்தில் சஞ்சரிப்பதால் இதுவரையில் உங்களுக்கிருந்த சங்கடங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக விலக ஆரம்பிக்கும். மனதில் புதிய நம்பிக்கை ஏற்படும். உடலில் இருந்த பிரச்சினைகள் நீங்க ஆரம்பிக்கும். துணிச்சலாக செயற்பட்டு நினைத்ததை அடைவீர்கள். உத்தியோகத்தில் இருந்த நெருக்கடிகள் விலகி அனுகூலம் உண்டாகும். வழக்குகள் இருப்பின் உங்களுக்கு சாதகமாகும். புதிய தொழில் தொடங்க முயற்சித்தவர்களின் எண்ணம் நிறைவேறும். அரசியல்வாதிகளின் செல்வாக்கு உயரும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் மாதத்தின் பிற்பகுதியில் ஏற்படும். பெண்களின் நிலையில் இருந்த சங்கடங்கள் விலகி முன்னேற்றம் ஏற்படும். இதுவரையில் இருந்த பாதிப்புகள் நீங்கும். திட்டமிட்டு செயல்படுவீர்கள். குடும்பத்தில் இருந்த சச்சரவுகள் விலகும். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை செலுத்துவீர்கள். சிலருக்கு பூர்வீக சொத்துகள் வந்து சேரும். குழந்தைக்காக ஏங்கியவர்களுக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். விவசாயிகளின் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். புதிய முயற்சிகளை




முன்னெடுப்பீர்கள். மாணவர்கள் சூழலைப் புரிந்து கொண்டு பொதுத் தேர்விற்குரிய முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

சந்திராஷ்டமம்: பெப்.18,19

அதிர்ஷ்ட நாள்: பெப்.15,22,24, மார்ச் 4,6

பரிகாரம்: துர்க்கையை ராகு காலத்தில் வழிபட வளம் உண்டாகும்.

விசாகம் 1,2,3 ஆம் பாதம்: அதிர்ஷ்டக்காரகனான சுக்கிரன், தன, புத்திர காரகனான குருவின் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு அறிவாற்றல் என்பது அதிகபட்சமாக இருக்கும். மற்றவர்களுக்கு ஆலோசனைகள் கூறி வழி நடத்துவதில் முதலிடத்தில் இருப்பீர்கள். இந்த மாதம் உங்களுக்கு யோகமான மாதம் என்றே சொல்ல வேண்டும். அதற்கு காரணம் உங்கள் நட்சத்திரநாதன் ஏழாம் இடத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியை பார்ப்பதுதான். அதன் காரணமாக இதுவரையில் உங்களுக்கிருந்த நெருக்கடி யாவும் விலக ஆரம்பிக்கும். பொருளாதார நிலை உயரும். சமூகத்தில் அந்தஸ்து, செல்வாக்கு உண்டாகும். சிலர் புதிய இடம் வாங்குவீர்கள். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும். வேலைக்காக முயற்சித்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும். உங்கள் லாப ஸ்தானத்தையும் குருபகவான் பார்ப்பதால் பொருளாதார நெருக்கடி விலகும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். கூட்டுத் தொழிலில் இருந்த சங்கடங்கள் விலகும். உத்தியோகத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் முடிவிற்கு வரும். பெண்களுக்கு இந்த மாதம் யோகமான மாதமாக இருக்கும் உடல் ரீதியாக இருந்த பிரச்சினைகள் விலகுவதுடன் வாழ்க்கையிலும் நன்மை ஏற்படும். திருமணம், குழந்தை பாக்கியம் போன்றவற்றிற்காக காத்திருந்தவர்களுக்கு அதற்குரிய பாக்கியம் உண்டாகும். சிலர் புதிய வீட்டில் குடியேறுவீர்கள். குழந்தைகள் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். தொழிலாளர்களுக்கு இருந்த சங்கடம் விலகும். விவசாயிகளின் நிலையில் மேம்பாடு தோன்றும். மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவர்.

சந்திராஷ்டமம்: பெப். 19.20

அதிர்ஷ்ட நாள்: பெப். 15,21,24, மார்ச் 3,6,12

பரிகாரம்: முருகனை வழிபட நன்மைகள் பெருகும்.



**விருச்சிக இராசி வாசகர்களே!**

**விசாகம் 4 ஆம் பாதம்:** பொன்னுக்கும் புகழுக்கும் காரகனான குரு, தைரிய வீரிய காரகனான செவ்வாயின் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு விவேகத்துடன் கூடிய வீரம் இருக்கும். எந்தவொரு முயற்சியிலும் வெற்றி அடைந்திடக் கூடிய சக்தி இருக்கும். இந்த மாதம் உங்கள் ராசிநாதன் முயற்சி ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் யாவும் வெற்றியாகும். வியாபாரத்தில் இருந்த சங்கடங்கள் நீங்கும். துணிச்சலுடன் செயற்படுவீர்கள். குருபகவானின் பார்வை உங்கள் குடும்ப, தன ஸ்தானத்திற்கு உண்டாவதால் குடும்பத்தில் நிம்மதி ஏற்படும்.

எதிர்பார்த்த வரவு உண்டாகும். பொருளாதார நெருக்கடி நீங்கும். தொழில் ஸ்தானத்திலும் குருபகவானின் பார்வை பதிவதால் புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றியாகும். தொழிலில் இருந்த தடைகள் நீங்கும். வெளிநாட்டு தொடர்புகள் யோகத்தை ஏற்படுத்தும். மாதத்தின் முற்பகுதியில் பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். சிலர் புதிய வாகனம் வாங்குவீர்கள். பெண்களுக்கு விருப்பம் நிறைவேறும் மாதமாக இருக்கும். குடும்பத்தில் செல்வாக்கு உயரும். தைரியமாக செயற்படுவீர்கள் என்றாலும் உடல்நிலையில் கூடுதல் கவனம் தேவை. வயிற்றுப் பகுதியில் ஏதேனும் சங்கடம் தோன்றிக் கொண்டே இருக்கும். அதற்கு மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது நல்லது. உத்தியோகம் புரியும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும். உங்கள் செல்வாக்கு உயரும். சிலர் புதிய வீட்டில் குடியேறுவீர்கள். விவசாயிகளுக்கு யோகமான மாதமாக இருக்கும். நீண்ட நாளாக வாங்க நினைத்த இடத்தை இந்த மாதம் வாங்குவீர்கள். விளைச்சலில் வருமானம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியின் மீது அக்கறை உண்டாகும்.

சந்திராஷ்டமம்: பெப்.19,20

அதிர்ஷ்ட நாள்: பெப்.18,21, மார்ச் 3,9,12.

பரிகாரம்: மாரியம்மனுக்கு விளக்கேற்றினால் கஷ்டம் அனைத்தும் தீரும்.

**அனுஷம்:** கர்மகாரகன் மற்றும் ஆயுள்காரகனான சனி, தைரிய வீரிய காரகனான செவ்வாயின் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு இயல்பாகவே தைரியமும் துணிச்சலும் அதிகபட்சமாக இருக்கும். எந்த ஒன்றிலும் உங்கள் இலக்கை எட்ட வேண்டும் என்ற நோக்கம் அழுத்தமாக இருக்கும். உங்கள் நட்சத்திர நாதன் நான்காம் இடத்தில் சஞ்சரித்தாலும் ராசிநாதன் மூன்றாம் இடத்தில் சஞ்சரிப்பதால் செயல்கள் யாவும் வெற்றியாகும். அலைச்சல் இருந்தாலும் அதற்கேற்ற ஆதாயம் உண்டாகும். தொழில், வியாபாரம் போன்றவற்றில் தடைகளை சந்தித்தாலும் உங்கள் முயற்சியால் அவை விலகும்.

வருமானத்திற்காக மேற்கொள்ளும் காரியங்கள் லாபத்தை ஏற்படுத்தும். சுக்கிர பகவான் மாதத்தின் முற்பகுதியில் உங்களுக்கு யோகத்தை உண்டாகுவார். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். குடும்பத்தினர் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள். இவையெல்லாம் ஒருபக்கம் இருந்தாலும் வியாபாரத்தில் கணக்கு வழக்குகளில் கவனமாக இருக்க வேண்டும்.

சட்டத்திற்கு புறம்பான செயல்கள் இந்த நேரத்தில் சங்கடத்தை ஏற்படுத்தும். புதபகவானின் சஞ்சார நிலையால் உங்கள் புத்திசாலித்தனம் வெளிப்படும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். பெண்களின் விருப்பம் பூர்த்தியாகும். சுயதொழில் செய்ய நினைத்தவர்களின் எண்ணம் நிறைவேறும். விரயச் செலவுகள் அதிகரித்தாலும் அவற்றினால் ஆதாயமே ஏற்படும். கலைஞர்களுக்கு மாதத்தின் முற்பகுதியில் எதிர்பார்த்த வாய்ப்புகள் வந்து சேரும்.




குலதெய்வ அருள் உண்டாகும். உடல் நிலையில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. விவசாயிகளின் முயற்சி வெற்றியாகும். மாணவர்கள் மாதத்தின் பிற்பகுதியில் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

சந்திராஷ்டமம்: பெப். 20,21

அதிர்ஷ்ட நாள்: பெப் 17,18,26, மார்ச் 8,9.

பரிகாரம்: முருகனை வழிபட முயற்சிகள் வெற்றியாகும்.

**கேட்டை:** கல்வி மற்றும் வித்தைகளுக்கு காரகனான புதன், ரத்த யுத்தக் காரகனான செவ்வாயின் அம்சத்தில் பிறந்த உங்களுக்கு எந்த ஒன்றிலும் திறம்பட செயற்படக்கூடிய ஆற்றல் இருக்கும். திட்டமிட்டு செயற்பட்டு உங்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றிக் கொள்வீர்கள். இந்த மாதம் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது பகவான் உங்கள் முயற்சிகளுக்கு துணை புரிவார் என்பதால் எதிர்பார்த்த ஆதாயங்கள் உண்டாகும். சிலர் கோயில் வழிபாட்டில் ஆர்வமுடன் பங்கேற்பீர்கள். புதிய சொத்து சேர்க்கையும் சிலருக்கு ஏற்படும். குருபகவானின் பார்வை குடும்ப ஸ்தானத்திற்கு உண்டாவதால் குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும். தொழிலில் இருந்த நெருக்கடிகள் நீங்கி வருமானம் அதிகரிக்கும்.

பணிபுரியும் இடத்தில் ஏற்பட்ட தொல்லைகள் முடிவிற்கு வரும். இருந்தாலும் நான்காம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி, சூரியனால் உடல் நிலையிலும் மன நிலையிலும் சங்கடங்களை சந்திக்க நேரிடும். அலைச்சல் அதிகரிக்கும். அரசு வழியில் சங்கடங்கள் தோன்றும் என்றாலும் உங்கள் இராசிநாதன் முயற்சி ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் எதையும் எதிர்கொள்ளக் கூடிய திறமை உங்களுக்கேற்படும்.

பெண்களுக்கு எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். கணவன், மனைவிக்குள் இருந்த பிரச்சினைகள் முடிவிற்கு வரும். பணிபுரியும் இடத்தில் இருந்த சங்கடங்கள் விலகும். விவசாயிகளின் விருப்பம் பூர்த்தியாகும். மாணவர்கள் இந்த நேரத்தில் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவதால் தேர்வில் அதிக மதிப்பெண் பெற முடியும்.

சந்திராஷ்டமம்: பெப். 21,22

அதிர்ஷ்ட நாள்: பெப்.18,23, மார்ச் 5,9

பரிகாரம்: பெருமாளை வழிபட தடைகள் விலகும்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லுறவுக்குட்...

தில் 10 வயது சிறுமியொருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்ட நிலையில், நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறுமியின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டது.

அதன்போதே, சிறுமி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளார் என கண்டறியப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் சிறுமியின் வீட்டிற்கு அருகிலுள்ள தென்னந்தோப்பில் வேலை செய்த 52 வயதான திருகோணமலை - குச்சவெளியைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி கடந்த வியாழக்கிழமை மாலை காணாமற் போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. .

இதனையடுத்து, பிரதேச மக்கள் தேடுதலில் ஈடுபட்டபோது, தென்னந்தோட்டத்தில் இருந்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை சிறுமியின் சடலம் மீட்கப்பட்டது.

சிறுமியின் தாயும் தந்தையும் புத்தளம் - பூக்குளம் கிராமத்தில் வசித்து வருவதுடன், பாடசாலை செல்வதற்காக சிறுமியும் அவரது இரு மூத்த சகோதரிகளும் சகோதரனுடன் ஊர்மனை கிராமத்திலுள்ள அம்மம்மாவின் வீட்டில் வசித்து வந்த நிலையிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

சந்தேகத்தில் கைதானவரை 48 மணி நேரம் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-7,285)

## இலங்கைக்கு...

இது தொடர்பில் அமெரிக்கா கவனம் செலுத்த வேண்டுமென சர்வதேச ஊடகமொன்றுடனான நேர்காணலின் போது மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

இலங்கையில் இந்த ஆண்டு தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், தற்போது நாடு புவிசார் அரசியல் நிலைத்தன்மையை அடைந்துள்ளதாக மைத்திரிபால சிறிசேன சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியாவின் தென்கிழக்கு கரையில் உள்ள இலங்கை, அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான பெரும் அரசியல் போட்டியில் சமீப காலங்களில் சிக்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் ஆழமான இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு தனது அமெரிக்காவுக்கான பயணம் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.(ம-7)

## விமான நிலைய...

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகள் உள்ளிட்ட சிலரை நேற்று முன்தினம் இரவு யாழில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சி.வி. விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்தியத் தூதுவருடன் பல கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். நாங்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைந்தால் ஏனைய பிரச்சினைகள் தானாகவே தீரும் என்ற அடிப்படையில் அவருடைய எண்ணங்கள், கண்ணோட்டம், பேச்சுக்கள் இருப்பதை அவதானித்தேன்.

பத்திரிகைகளில் 500 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்போவதாக வெளியான செய்திகள் எமக்குப் பேரதிர்ச்சியைத் தந்ததையும் நான் இந்தியத் தூதுவருக்குச் சுட்டிக் காட்டினேன்.

விமான நிலையத்தின் அபிவிருத்திக்குத் தற்போது விமான நிலையத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகளே போதுமானவை என்பதை இந்தியத் தூதுவரிடம் நான் தெளிவுபடுத்தியிருந்தேன்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விரிவுபடுத்தல் சம்பந்தமாக மக்களின் 500 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்படவுள்ளதாக வெளியான செய்திகள் பொய்யானவை எனத் தூதுவர் சந்தோஷ் ஜா என்னிடம் தெரிவித்திருந்தார்.

அப்படி எந்தவிதமான எண்ணமும் தமக்கு இல்லை எனவும், இலங்கை அரசிடம் எதுவிதமான காணிகளைப் பெற்றுத்தருமாறு கோரவில்லை எனவும் அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

மேலும், பொருளாதார ரீதியாக முன்னேற்றம் கண்டால் தமிழ் மக்களுடைய வாழ்வாதாரம் முன்னேற்றம் அடையும். அவர்களுக்கான வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும். அரசியல் ரீதியாகவும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இந்தியத் தூதுவர் தெரிவித்தார் என சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ம-7)

## முல்லையில்...

கரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான விசாரணைகளை புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,350)

## தமிழரசுக்...

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகள் உள்ளிட்ட சிலரை நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே சுமந்திரன் எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தால் எங்களுடைய நிர்வாகச் செயலாளருக்குக் கொடுக்கப்பட்ட ஆவணத்தைப் பார்வையிட்டிருந்தேன். திருகோணமலை நீதிமன்ற ஆவணம் இன்னும் யாரிடமும் சேர்க்கப்படவில்லை.

கட்சியாப்பிலே இருக்கின்ற சில சரத்துக்கள் மீறப்பட்டுள்ளன எனக் குற்றம் சுமத்தியே இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்படியான யாப்பு மீறல்கள் இருக்குமாக இருந்தால் அதனை நிவர்த்தி செய்து நாங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைக்குச் செல்லலாம்என்பதே என்னுடைய கருத்து.

ஏனென்றால், ஒரு கட்சியினுடைய நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவது அல்லது முறைப்படுத்துவது அந்தக் கட்சியினுடைய யாப்பு மட்டுமே.

பல தடவைகளிலே நாங்கள் சில விடயங்களைக் கவனிப்பதில்லை. அப்படிக் கவனிக்காமல் இருக்கின்ற போது அது பழக்கமாக வந்துவிடும். ஆனால், யாராவது அதைச் சவாலுக்கு உட்படுத்தினால்தான் அந்தப் பிரச்சினை வெளிப்படும்.

ஆகவே, யாப்பில் இருக்கின்ற விடயங்கள் சரியாகப் பின்பற்றப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுமாக இருந்தால் பொறுப்பான அரசியல் கட்சியாக அதனைத் திருத்தி யாப்பின்படி செயற்படுவதுதான் சரியான முறை என்று நான் கருதுகின்றேன் எனவும் தெரிவித்தார். (ம-7)

## பின்னணியில்...

றுக் கொள்ள முடியாத காரணத்தால் குறித்த நடவடிக்கை வெற்றியளிக்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவுடன் இணைந்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.02.17
சீட்டிழுப்பு இலக்கம் 0219
Q 4 8 8 7 2 9 Q

தன நிதானய
திகதி - 2024.02.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1423
Z 14 21 52 61 Z
44736

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3635
சீட்டிழுப்பு திகதி 17.02.2024
P 28 40 56 64
P 10279

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2024.02.17
சீட்டிழுப்பு இலக்கம் 0702
மீனம் 27 40 56 59 மீனம்
12253 24

மஹஜன சம்பத
திகதி 2024/02/17
சீட்டிழுப்பு இலக்கம் 5393
Z 7 4 1 9 0 3

மெகா பவர்
திகதி 17/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1741
F 20 20 44 60 63
47254

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 17.02.2024 வெற்றி வாரம் 101 வர்ணம் நீலம்
G 6 0 7 2 9 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,257,252.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2367 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.17 தினம் சனிக்கிழமை
08 22 31 71 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 73,194,347.20

சனிதா
திகதி 2024.02.17 வெற்றி வாரம் 4528
26 34 42 70 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,113,276.80

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4079 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.17 தினம் சனிக்கிழமை
18 27 33 53 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,087,521.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 23 09 13 25 31
1543 சிவப்பு 17.02.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 506,689,422.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47

சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2193
சீட்டிழுப்பு திகதி: 2024.02.17
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.92,010,720.80
ADA KOTIPATHI
09 27 39 60 C


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

**Village Hotel Jaffna Express**

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் → உரும்பிராய் → திருநெல்வேலி → யாழ்ப்பாணம் → கொழும்பு

**கட்டணம் - 2700/=**

தொடர்புகளுக்கு

**077 544 8503**

(19118)

## PREGNANCY VOUCHER

கர்ப்பிணித் தாய்மாருக்கான Voucher இற்குரிய பொருட்களை இப்போது Happy Super market உரும்பிராயில் கொள்வனவு செய்யலாம் (வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம்- பதிவுள்ளோர் மட்டும்) காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை

Happy Super market - உரும்பிராய்

**077 780 8030**

(19159)

## வீதி விபத்து...

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி பகுதியில் சில மாதங்களுக்கு முன் இடம்பெற்ற அன்புலன்ஸ் -மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் புடவைக்கடை உரிமையாளரும் மற்றும் உதவியாளரும் மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிப் பயணித்த போது எதிரே வந்த அன்புலன்ஸ் மோதி விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் இருவரும் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந் நிலையில் புடவைக் கடை உரிமையாளர் சிகிச்சை பலனின்றி நேற்று பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.(ம-7)

## வேலை வாய்ப்பு

Pickme Taxi நிறுவனத்தில் Sales Executive வேலை செய்யக்கூடியவர் தேவை.

( JAFFNA BRANCH )

**077 473 7737**
**076 010 6139**

(19163)

## விரைவு பொதிகள் சேவை

DHL

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.

Lanka Cargo Worldwide Express

பணியாளர் தேவை

இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

077 038 5584

(19164)

## யாழ். கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 1/2 பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. மொத்தமாக 55 மில்லியன் (5 கோடியே 50 லட்சம்)

(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)

தொடர்புகளுக்கு :

**+447963743585(Whatsapp)**
**021 222 7141(Srilanka)**
**E.mail : Jamesraj_uk@yahoo.co.uk**

(18948)

## V2 VISA SERVICES

கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8376)

## Zoom மூலமான வகுப்பு வரலாறு

**SB.sanu**

(பிரபல பாடசாலை ஆசிரியர்)

(தரம் 06 - A/L வரை)

- தரம் 10,11 paper Class
- A/L புதிய பிரிவுகள் (2024,2025 A/L)

90 புள்ளிக்கு மேல் உத்தரவாதம்

தொடர்புகளுக்கு : 077 83 43 666

(18629)

## VACANCY

சூப்பர் மாக்கட் ஒன்றிற்கு தீழ்வரும் பணியாளர் தேவை.

- Chief Cashier ஆண்/பெண்
- Supervisor ஆண்/பெண்

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

இடம் : உரும்பிராய்

**076 422 1761**

(19159)

## வேலையாள் தேவை (சைவ உணவகம்)

- சமையலாளர் : அப்பம், மசாலாத் தோசை, ரொட்டி செய்யக்கூடியவர்.
- உதவியாளர்
- உணவு பரிமாறுநர்(பெண்கள்)

**075 060 9499**

(19126)

## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**077 986 5457**

(19133)

## வீடு, காணி விற்பனைக்கு

- வட்டுக்கோட்டை Jaffna College இல் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி செல்லும் பிரதான வீதியில் கல்லூரிக்கு 500m தூரத்தில் வீடு விற்பனைக்கு உண்டு.
- வட்டுக்கோட்டை பிரதான வீதியில் கலட்டி ஒழுங்கையில் 1 வது கலட்டி ஒழுங்கையில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (பி.பகல் 4.00 மணிக்கு பின்பு மட்டும்)

**076 742 4301**

(19158)

## சுத்திகரிப்புப் பணியாளர் தேவை

மேக்ஸ் சுத்திகரிப்புச் சேவை தனியார் நிறுவனத்தால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு ஆண்/பெண் சுத்திகரிப்புப் பணியாளர் கோரப்படுகின்றனர். ஆர்வம் உடையோர் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

(19138)

**076 869 5674/ 077 106 5645/ 021 222 2461**

## Visa

Canada, U.K, Swiss, France, Australia, USA, Norway, Denmark, Italy, Germany etc...

போன்ற சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

- Visitor visa/ Tourist Visa - All Countries
- Student Visa - Canada
- Minor education - 7 - 17 Years
- Work visa - Italy, Canada
- Air ticketing for All Countries



Book an appointment -
**070 375 0002**

315, Kasthuriyar Road, Jaffna.

(19164)

## தீபம் கல்வி நிலையம்

இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம். (கலைக்கோட்டம் அருகில்)

**கல்வியாண்டு 2024**

**தரம் 6 முதல் O/L வரை**

(தமிழ் மொழிமூலம், English Medium)

அன்பான பெற்றோர்களே!

- எமது நிறுவனத்தில் ஆங்கிலமொழி மூலம் (English Medium) maths, Science,Geography, Civics, ICT, Health ஆகிய பாடங்கள் நடைபெறுகின்றது.
- O/L(2023) மாணவர்களுக்கான Paper class நடைபெறுகின்றது.
- வெளி மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.

அனுமதிகள் வழங்கப்படுகின்றது

"தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சி மிகு எதிர்காலம்"

தொடர்புகளுக்கு : **077 224 7781**

(19160)

## விற்பனைக்கு உண்டு

சரிசெய்யக்கூடிய (Adjustable) மற்றும் Commode வசதியுடன் கூடிய சக்கர நாற்காலி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**076 295 8594**

(C-8375)

## விற்பனைக்கு

நெல் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**077 322 3136**
**021 222 8186**

(18994)

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 267 /= | Max 5Kg | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 297 /= | | |
| 1 Kg அரிசி மா | - 196 /= | | |
| 1 Kg கோதுமை மா | - 184 /= | | |
| 1 Kg Prima கோதுமை | - 187 /= | | |
| 1 Kg தீட்டல்பச்சை | - 168 /= | | |
| 1 Kg றவை | - 284 /= | | |
| 400 g Sustagen சஸ்ரயன் | - 3600 /= | ~~3960/=~~ | |
| 1.2 Kg Sunlight பவுடர் | - 399 /= | ~~450/=~~ | |
| 01 Baby Soap | - 112 /= | ~~145/=~~ | |
| 01 Lux Soap Rose | - 145 /= | ~~175/=~~ | |
| 300 g நெஸ்டமோல்ட் | - 580 /= | ~~620/=~~ | |
| 400 g Anlene அன்லீன் | - 1259/= | ~~1850/=~~ | |

1040/=



~~1080/=~~

Max - 02

யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

(19159)

## காணி விற்பனைக்குண்டு

நயினாதீவு 2 ஆம் வட்டாரத்தில் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் இருந்து 800 m தொலைவில் பழைய வீட்டுடன் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**077 609 3562**

(19153)

## வீடு விற்பனைக்கு

ஆசீர்வாதம் ஒழுங்கை ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் எமது வீடு (ஒரு மாடி) விற்பனைக்குள்ளது. (கிறீன் கிறாஸ் ஹொட்டல் முன்பாக)

**077 551 3673**

(19154)

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் வசிக்கும் நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு தங்கி நின்று பணி புரியக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :

**070 761 9757**

(19139)

## மெட்டி ஒலி திருமண சேவை

சூரியன் செவ்வாய் கனடாப்பெண் (1989,1999) ஆகியோருக்கு மணமகன் தேவை. ஐரோப்பாவிலுள்ள சூரிய செவ்வாய் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. அத்துடன் உங்கள் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப மணமகன், மணமகள் பார்த்து தரப்படும்.

074 026 6554, 077 889 4353
0094764752219(whatsapp,viber only)

(19155)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.